பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 11 வெள்ளிக்கிழமை 24.01.2025 கதிர் 077

## கைதான முன்னாள் அமைச்சர் அநுர யாப்பாவுக்கு பிணை

குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட நான்கு சந்தேகநபர்களையும் பிணையில் விடுவிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீண்ட பரிசீலனைக்குப் பிறகு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனவல நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

2014 ஆம் ஆண்டு பிங்கிரிய, நாரம்மல பகுதிகளில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 61இலட்சத்து 46ஆயிரத்து 110ரூபா நிதியைப் பெற்று, அந்த நிதியை அதற்காகப் பயன்படுத்தாமல், அதை 2015ஆம்ஆண்டுஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்திற்கு பயன்படுத்தியதாக அவர்கள் மீது குற்றச்சாட்டுள்ளது.

அதன்படி, இந்த நிதியை முறைக்கேடாகபயன்படுத்தியுள்ளதுடன், பொதுச் சொத்தின் கீழ் வரும் குற்றமாக இருப்பதால், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## முதல் அரசியல் பழிவாங்கலே முன்னாள் அமைச்சரின் கைது

### பெரும் எதிர்ப்பு காட்டுவோம் என்கிறார் சம்பிக்க

அநுர - ஹரிணி அரசாங்கத்தின் முதலாவது அரசியல் பழிவாங்கலாக முன்னாள் அமைச்சர் அநுரபிரிதர்ஷன யாபா மற்றும் அவரது மனைவி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்ட உண்மையான குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக ஆளும்தரப்பு இவ்வாறு செயற்படுமானால் விரைவில் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ☞ 2

## என்னை கைது செய்தது அரசியல் பழிவாங்கலே

### முன்னாள் அமைச்சர் அநுர யாப்பா தெரிவிப்பு



10வருடங்களுக்குபிறகு என்னைகுற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு (சிஐடி) அழைத்து செல்லும் அளவுக்கு தேவை இருக்க வில்லை. இது அரசியல் பழிவாங்களில் ஒரு பகுதியாகும்.அச்சுறுத்திஆட்சி செய்வதற்காக மக்கள் இந்த ஆளும்தரப்புக்கு ஆணை வழங்கவில்லை.அரசாங்கம் நியாயமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். அதிகாரத்தை ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

வரவிருக்கும்தேர்தல்களையொட்டி ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படுவதுதொடர்பில்இருகட்சிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இரு கட்சிகளின் உயர் மட்டக் குழுக்களும் இதற்கான அனுமதியை வழங்கியிருக்கும் நிலையில் இந்தப் பேச்சுக்கள் இரண்டு கட்டங்களாக நடந்து முடிந்துள்ளன.

இதுவரையில் பேச்சுக்கள் வெற்றிகரமாகச் செல்வதாகவே ☞ 2

## புலமைப் பரிசில் பெறுபேறுகள் வெளியாகின

2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில்பரீட்சையின்பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், www. doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறுபேறுகளைபார்வையிடலாம்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாவட்டங்களுக்கான தமிழ் மற்றும் சிங்கள மொழி ☞ 2

## கஜேந்திரகுமாருடனான ஜன 25 சந்திப்பு

# கட்சிக்கு அழைப்பு கிடைத்தால் பேச்சு குறித்துப் பரிசீலிக்கலாம்

### தமிழ் அரசின் தலைவர் தெரிவிப்பு

**ஆளும்தரப்பு உருவாக்கவுள்ள புதிய அரசமைப்புதொடர்பாகக்கலந்துரையாடதமிழ் அரசுக் கட்சி மற்றும் ரெலோ ஆகியவற்றுக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி விடுத்த அழைப்புதமிழ்அரசுக்கட்சிக்குஉரியமுறையில் விடுக்கப்படவில்லை என்று அதன் தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார். கட்சிக்கு உரியமுறையில் அழைப்பு விடுக்கப்பட்டால் அது பரிசீலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.**

**செய்தியாளர்களைநேற்றுயாழ்ப்பாணத்தில் சந்தித்தபோதேஅவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பில் எந்தவித** ☞ 2

## புகைப் பிடிக்கும் பழக்கம் பெண்களிடம் அதிகரிப்பு

### இளம் பெண்களுக்கு புற்றுநோய் அபாயம்

ஆண்கள் புகைப்பிடிக்கும் வீதம் குறைவடைந்துள்ள நிலையில், பெண்களிடையே அதிகரித்து வருகிறது. இதனால் இளம்பெண்களுக்கு புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாக சிறுவர் சுவாச நோய் வைத்திய நிபுணர் சான டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எமது உடலில் சுவாச அமைப்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில், ☞ 8

## நாடாளுமன்றத்திலும் உணவு விலை எகிறல்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உணவு விலையை 450 ரூபாவில் இருந்து 2000 ரூபாவாக உயர்த்துவதற்கு நாடாளுமன்ற பராமரிப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை திருத்தத்தின்படி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தினசரி காலை உணவிற்கு 600 ரூபாவும், மதிய உணவிற்கு 1300 ரூபாவும், மாலை தேநீருக்கு 100 ரூபாவும் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற பராமரிப்புக் குழுவின் உறுப்பினரான ☞ 8

### ஐநா மனித உரிமைகள் பேரவையிலிருந்து

## அமெ. விலகிச் செல்லும் பட்சத்தில் இலங்கை விடயத்தில் பின்னடைவு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகும் பட்சத்தில், இலங்கை தொடர்பான செயன்முறையை முன்னெடுத்துச்செல்வதில் பின்னடைவு ஏற்படக்கூடும் எனச் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ள கனேடிய உயர் மட்டப் பிரதிநிதி மேரி- லூயிஸ் ஹனன், இருப்பினும் இலங்கை விவகாரம் தொடர்பில் கனடா கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். ☞ 2

## நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை ஆளும்தரப்பு மீள் பரிசீலனை செய்யும்

### நிதி பிரதி அமைச்சர் அறிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக, நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்ய ஆளும்தரப்புத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

புதிய நிர்வாகத்தின் ☞ 2

### மருத்துவர் அருச்சுனா எம்.பி. உட்பட

## யாழ். மாவட்ட வேட்பாளர்கள் 9 பேரின் செலவு அறிக்கை குறித்து விசாரணை

### சசிகலா, சுரேன் ஆகியோரும் அடக்கம்

2024 பொதுத் தேர்தலில் போட்டியிட்டுவெற்றிபெற்ற யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா உட்பட ஒன்பது வேட்பாளர்களின் தேர்தல்செலவுகள்குறித்துயாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளைத் ஆரம்பித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மற்றும் ☞ 2

### நல்லூர் வாசியின் முறைப்பாட்டை அடுத்து

## குடிவரவு குடியல்கவு அதிகாரி லஞ்சக் குற்றச்சாட்டில் கைது

5 இலட்சம் ரூபாவை பெற்ற குடிவரவு - குடியகல்வு திணைக்களப் பிரிவின் அதிகாரி ஒருவர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முறைப்பாட்டாளரை வெலிசர குடிவரவு திணைக்களத்தில் இருந்து விடுவிக்க ஏற்பாடு செய்வதற்காகவே சந்தேகநபர் இலஞ்சம் கோருகிறார் என்று யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு பகுதியைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தெரிவிக்கப்படுகின்றது. இரு கட்சிகளையும் மீண்டும் ஒன்றிணைப்பது குறித்த திசை நோக்கியே பேச்சு அமைந்திருந்தது. ஆனால், தலைமையை யார் வைத்திருப்பது என்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக இப்போது இரு கட்சிகளும் சேர்ந்து தேர்தல்களை எதிர்கொள்வதை நோக்கியே பேச்சுக்கள் செல்கின்றன என்று தெரிகிறது.

இதில் இன்னும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதுஉள்ளூராட்சிசபைத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்தே ஒரே சின்னத்தில்கேட்பதா அல்லது தனித்தனியாகத் தேர்தலைச்சந்தித்த பின்னர் ஆட்சியமைக்கும் விடயத்தில் சேர்ந்து செயற்படலாமா என்பது குறித்தே இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுக்களில் ஆராயப்பட்டுள்ளது.

அடப் பாவிகளா!

இதைத்தானே தமிழ் அரசுக் கட்சி முன்கூட்டியே சொன்னது. அதைப் சொன்னபோது தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துவிட்டது என்றுகொதித்துக்கொந்தளித்துகூட்டமைப்பை சிதறடித்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்று ஒன்றை உருவாக்கி அனைத்தையும் போட்டுடைத்தார்களே! இந்தத் தலைவர்களை என்னவென்று சொல்வது? இப்போது தமிழ் அரசுக் கட்சியுடன் மீண்டும் ஒட்டுவதற்கு மற்றைய கட்சிகள் இதே உத்தியைப் பின்பற்றலாமா என்று சிந்திப்பது வேறு விடயம். எதிர்காலம் குறித்த தீர்க்க தரிசனம் இல்லாத இத்தகைய தலைவர்கள் தமிழர்களுக்கு விடிவைப் பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்ப்பதைப் போன்ற முட்டாள்தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கு இடையிலான இரண்டாம் கட்ட பேச்சு இரு கட்சிகளினதும் பொதுச் செயலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது. ஜனவரி 18 முதல் கட்டப் பேச்சு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஜனவரி 20 இந்தப் பேச்சுக்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு அனுமதியளித்தது. இந்நிலையிலேயே இரண்டாம் கட்ட பேச்சு நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாலையே கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலொன்றில் இரு கட்சிகளினதும் பொதுச் செயலாளர்களது தலைமையில் பேச்சு இடம்பெற்றது.

பேச்சு வெற்றிகரமாக இருந்தது என்று ஐக்கியமக்கள்சக்திதரப்பில்தெரிவிக்கப்பட்டது. உள்ளூராட்சிமன்றத்தேர்தல்உட்படஅடுத்தகட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது. கூட்டணியாகத்தேர்தலில் போட்டியிடுவதா அல்லது தேர்தலில் தனித்துப் போட்டியிட்டுப் பின்னர் கூட்டணியமைத்து செயற்படுவதா என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பேச்சு நல்ல முறையில் முன்னேறுகின்றது. பொதுக்கூட்டணியொன்றைஅமைப்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முயற்சிக்கின்றோம். எதிர்காலத்தில்இருதரப்பும் இணைந்து செயற்படவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

பொதுச்செயலாளர்ரஞ்சித்மத்துமபண்டார தெரிவிக்கையில், பேச்சு வெற்றிகரமாக நிறைவடைந்தது. பலபொது இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. விரைவில்இறுதிஇணக்கப்பாடும் எட்டப்படும். பேச்சில் கலந்துகொண்ட தரப்பினர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடுவர். அதற்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கட்சிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

அரசமைப்பு வரைபு கலந்துரையாடல் மற்றும் கட்சிகளோடு பேசுவதற்கு ஏழு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டாலும்கூட கஜேந்திரகுமார் அழைத்த கூட்டத்தில் பங்குபற்றுவது தொடர்பில் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படவில்லை.

கஜேந்திரகுமாரின் அழைப்பை நாங்கள் நிராகரிக்கவில்லை. எதிர்க்கவும் இல்லை. காலப் போக்கில் பரிசீலிக்கலாம் என்ற முடிவோடுதான் இருந்தோம். ஆனால், 25 ஆம் திகதி கூட்டம் தொடர்பாக தெளிவாகத் தெரியவில்லை.

தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவராக நான் இருந்தாலும் கூட்டம் தொடர்பில் அறிவிப்போ, அழைப்போ எனக்குக் கிடக்கவில்லை. இதேபோன்று எமது கட்சியின் பொதுச் செயலாளருக்கும் அழைப்பு கிடைத்ததாகத் தெரியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனிடம்தான் குறித்த விடயம் கதைக்கப்பட்டது. கட்சிக்கு உரிய அழைப்பு விடுக்கப்பட்டால் இதை நாங்கள் பரிசீலிக்கலாம். அதற்காகத்தான் குழு ஒன்றும் நியமிக்கபட்டுள்ளது -என்றார்.

## புலமைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலங்களுக்கான வெட்டுப்புள்ளிகளும் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருணாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களுக்கு தமிழ் மொழிமூலத்துக்கானவெட்டுப்புள்ளி141ஆகும். இதுவே அதிகூடிய வெட்டுப்புள்ளியாகும்.

இரண்டாவது ஆகக்கூடிய வெட்டுப்புள்ளி 139 ஆகும். நுவரெலியா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு வெட்டுப்புள்ளி 139 ஆகும். மேலும் மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கான வெட்டுப்புள்ளி 138 ஆகும். இரத்தினபுரி மாவட்டத்துக்கு மாத்திரம் 136 வெட்டுப்புள்ளியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியான முடிவுகளின்படி யாழ். மாவட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை மாணவன் 186 புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். 186 புள்ளிகளைப் பெற்று பிரசோதன் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

யாழ். ஜோன் பொஸ்கோ மாணவன் 185 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

## முதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுவோம் என முன்னாள் அமைச்சர் சம்பிக ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆளும்தரப்பின் முதலாவது அரசியல் பழிவாங்கலாக முன்னாள் அமைச்சர் அநுரபிரிதர்ஷனயாபாமற்றும்அவரதுமனைவி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளார். 2014இல் வெள்ளப் பேரிடருக்கான இழப்பீட்டு தொகை குறித்த விவகாரத்தின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அர்ஜுனமகேந்திரனை கைது செய்து மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறியே இவர்கள் ஆட்சியைப் பொறுப்பேற்றனர்.

2022 பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டது. எனினும் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்து இது குறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று நாம் எண்ணினோம்.

இலத்திரனியல் வீசா ஊழலில் 320 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பை ஏற்படுத்திய அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு ஊடாக 10 மாதங்களுக்கும் அதிக காலம் மக்களுக்கு கடவுசீட்டைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இவ்வாறு மிக முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு குற்றச் செயல்கள் தொடர்பிலும் எவ்வித நடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவில்லை.

இவற்றை தவிர்த்து முன்னாள் அமைச்சர் அநுர யாபா மற்றும் அவரது மனைவி கைது செய்யப்பட்டுள்ளமைமுற்றுமுழுதாகஅரசியல் பழி வாங்கலாகும். கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் அக்கட்சிகளுடன் இருந்த குழுக்கள் புதிதாக மறுசீரமைக்கப்பட்டு புதிய தலைமைத்துவத்துக்கு அநுர யாபாவை தெரிவு செய்து, புதிய அரசியல் கூட்டணியைஅமைப்பதற்கானநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

ஜனவரி 8 இடம்பெற்ற ஒன்றுகூடலில் பெரும்பாலானோர் பொறுப்புள்ள எதிர்க் கட்சியினர் என்ற ரீதியில் ஒன்றிணைந்தனர். பலமான எதிர்க்கட்சியின் மீதுள்ள பயம், அரிசி, தேங்காய், மருந்து என்பவற்றை வழங்க முடியாத இயலாமை, அத்தியாவசிய சேவைகளுக்கான வரிகளை குறைக்க முடியாமை என்பவற்றால் இந்த பலவீனமான ஆளும்தரப்பு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. இவை தொடர்பில் கடும் கண்டனத்தைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த உண்மையான குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல், இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களில் ஈ-டுபடுவதற்காக இந்த ஆளும்தரப்புக்கு மக்கள் ஆணையை வழங்கவில்லை.

ஆளும்தரப்பு தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் பட்சத்தில் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என எச்சரிக்கின்றோம். குற்றப்புலனாய்வு பிரிவு ஆளும்தரப்பின்கைப்பாவையாகியுள்ளது. முழு உலகும்இதனைப்பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை பதில் பொலிஸ் மா அதிபருக்கு நினைவுபடுத்துகின்றோம் என்றார்.

## யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்களான சசிகலா ரவிராஜ், ஏ.உமாகரன் இராசையா, எஸ்.மயூரன், டி.கிருஷ்ணானந்த், என்.கௌசல்யா மற்றும் குருசாமி சுரேன் ஆகியோரின் தேர்தல் செலவுகள் குறித்தே பொலிஸார் விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

வேட்பாளர் சசிகலாவின் வாக்குமூலம் ஏற்கனவே பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் தேர்தல் ஆணையகத்திடம் பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளனர்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் திருத்தங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பல வரிச் சலுகைகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சர்வதேசநாணயநிதியத்தினால் வழங்கப்பட்டுள்ளதை விட, மக்களுக்கு அதிக நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில், தற்போதைய ஆளும்தரப்புஅந்தநிலைமைகளின்கடினமான விடயங்களைஓரளவுக்குக்குறைக்கத்தயாராக உள்ளது என்று அமைச்சர் கூறினார்.

வருமானம் ஈட்டும்போது செலுத்த வேண்டிய வரி எல்லையை ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவது, குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு, பால் பொருட்கள் மீதான பெறுமதி சேர் வரி விலக்கு, பாடசாலை உபகரணங்களை வாங்குவதற்கு மாணவர்களுக்கான6,000ரூபாகொடுப்பனவு ஆகியவையும் இதில் அடங்குமென பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

## அமெ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக புதன்கிழமை இலங்கை வந்திருந்த கனடாவின் உலகளாவிய விவகாரங்கள் பிரிவின் தெற்காசியத் தொடர்புகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் மேரி-லூயிஸ் ஹனனுக்கும், கொழும்பைத்தளமாகக்கொண்டுஇயங்கிவரும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தற்போதைய ஆளும்தரப்பு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதாக வாக்குறுதியளித்த போதிலும், இன்னமும் அதற்குரிய நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என மேரி-லூயிஸ் ஹனனிடம் சுட்டிக்காட்டிய சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இவ்விடயத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர்.

அதேபோன்று இலங்கை என்பது பல்லின சமூகங்கள் வாழும் பன்மைத்துவ நாடு எனும் போதிலும், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும்சிலதீர்மானங்கள்மற்றும் நியமனங்களின்போது அந்த பன்மைத்துவம் பிரதிபலிக்கவில்லை என்றும் அவர்கள் கனேடிய உயர்மட்டப் பிரதிநிதி மேரி-லூயிஸ் ஹனனிடம் எடுத்துரைத்தனர்.

அத்தோடு கடந்தகால மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் செயன்முறையைப் பொறுத்தமட்டில் இலங்கை அரசினால் உருவாக்கப்பட்டிருக்ககும் காணாமல் போனோர்பற்றியஅலுவலகம்,இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட உள்ளகக் கட்டமைப்புக்களால் எவ்வித முன்னேற்றங்களும் அடையப்படவில்லை என விசனம் வெளியிட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவும் செயன்முறையில்ஏற்பட்டிருக்கும்பின்னடைவு குறித்தும் விளக்கமளித்தனர்.

அவற்றைச் செவிமடுத்த கனேடிய உயர்மட்டப்பிரதிநிதி மேரி-லூயிஸ் ஹனன், இலங்கையின்மனிதஉரிமைகள்நிலைவரம் குறித்தும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்தும் கனடா கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனத் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி தற்போது ஐக்கிய நாடுகள்மனிதஉரிமைகள்பேரவையிலிருந்து அமெரிக்கா விலகும் பட்சத்தில், பேரவையில் இலங்கை தொடர்பான செயன்முறையை முன்னெடுத்துச்செல்வதில்பின்னடைவொன்று ஏற்படக்கூடும் எனக் குறிப்பிட்ட அவர், இருப்பினும் கனடா அதன் நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதியாக இருக்கும் என்றார்.

## என்னை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனமாகக் கையாளவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

2014ஆம்ஆண்டு6.1மில்லியன்ரூபாவை முறைகேடாகப்பயன்படுத்தியக்குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளால்நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் அவரது மனைவி ஆகியோர்நேற்றையதினம்கொழும்புநீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுக்கக்கப்பட்டிருந்தனர்.

முன்னாள் அமைச்சர் நீதிமன்ற வளாகத்திலிருந்து வெளியேறியதன் பின்னர் தனது கைது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம் மீது வழக்குத் தொடர்ந்தமை தொடர்பில் எமக்கு பிரச்சினை இல்லை. ஆனால் 10 வருடங்களுக்கு பிறகு இரவு வீட்டுக்குள் புகுந்து என்னை சிஐடிக்கு அழைத்து செல்லும் அளவுக்கு தேவைப்பாடு இருக்கவில்லை. அழைப்பு விடுத்திருந்தால் நானேகுற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்குச் சென்றிருப்பேன்.

ஆளும்தரப்பிடம் எப்போதும் ஜனநாயகம் தொடர்பான கோட்பாடு இருக்கவேண்டும். அது அற்றுப் போகும்போது அங்கு சர்வாதிகாரம் தோற்றம் பெறும். இந்தக் கைது திட்டமிட்டு வேண்டுமென்றே இடம்பெற்றுள்ளது. அந்தக் காலப் பகுதியில் எமக்கு கிடைக்கப்பெற்ற நிதியை உரிய முறையில் மக்களுக்குப் பகிர்ந்தளித்தோம். அதற்காக அரச அதிகாரிகளைப் பயன்படுத்தினோம்.

எனது வாழ்நாளில் அரச சொத்துக்களை எனது தனிப்பட்ட தேவைக்காக தவறான வழியில்பயன்படுத்தியதுகிடையாது. அதற்கான தேவையும்எனக்கு இருக்கவில்லை. இதற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. இது அரசியல்பழிவாங்களில்ஒருபகுதியாகும். இது 2015 ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அதன் மற்றுமொரு கட்டமே இதுவாகும். எனினும் நாட்டின் நீதித்துறை கட்டமைப்பு சுயாதீனமாக செயல்படுகிறது என்பதை கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். அச்சுறுத்தல் விடுப்பதற்காகவோ அல்லது பயமுறுத்துவதற்காவோ மக்கள் உங்களுக்கு ஆணை வழங்கவில்லை.

நியாயமான முறையில் ஆட்சி செய்யுங்கள். இதனை விட உச்ச அதிகாரத்தில் இருந்தவர்களை நாம் பார்த்துள்ளோம். அவர்கள் பின் கதவால் தப்பியோடியதையும் பார்த்துள்ளோம். எனவே அரசியல் அதிகாரத்தை மிகவும் கவனமாக பயன்படுத்துங்கள் என்றார்.

# முஸ்லிம்கள் தொடராக அரசால் புறக்கணிப்பு

## இம்ரான் எம்.பி. காட்டம்



(அபு அலா)

அரசாங்கம் அடுத்தடுத்து முஸ்லிம்களை புறக்கணித்து வருகின்ற போதிலும் அரசிலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுகுறித்து கவனம் செலுத்தாது மௌனமாக இருப்பது முஸ்லிம் சமூகத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது என திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படும் முஸ்லிம்கள் புறக்கணிப்பு விடயத்தில் தற்போது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் பேசுபொருளாகியுள்ளது. சிரேஸ்டத்துவ அடிப்படையில்முன்னிலையிலிருந்தஒருவரைவிடுத்து புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் ஊடகங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

விடப்பட்டவர் முஸ்லிம். இவர் முஸ்லிம் என்ற காரணத்திற்காக விடப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுள்ளது. நீதித்துறை நியமனங்களில் கூட முஸ்லிம் சமுகத்திற்கு நீதியில்லை என்றால் இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் எப்படி நியாயமான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியும்என்று கேட்கவிரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் அடுத்தடுத்து பறக்கணிக்கப்படுகின்ற போதிலும் அரசாங்கத்திலுள்ள முஸ்லிம்நாடாளுமன்றஉறுப்பினர்கள் இவை குறித்து இதுவரை எதுவும் பேசாது மௌனம் காப்பது முஸ்லிம் சமூகத்தில் பெருங்கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் குறித்து இப்போது பேசுகின்றது. அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்குதல் மற்றும் ஏற்றாத்தாழ்வுகளை ஒழித்தல் என இதுதத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இதுபோன்ற புறக்கணிப்பு செயற்பாடுகளைப் பார்க்கும் போது எங்கே சம உரிமை உள்ளது. எப்படி ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. எந்தத் திட்டமும் கடதாசியில் இருக்கலாம். அது வாசிப்பதற்கு திருப்தியாகத்தான் இருக்கும். நடைமுறையில் அது இல்லை என்றால் அதனால் என்ன பயன் ஏற்படும் என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

எனவே, இந்த அரசாங்கமும் கோட்டாபயவின் முஸ்லிம் விரோத வழியில் பயணிப்பதான சந்தேகமே இப்போது அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. - என்றார்.

# விவேகானந்த பூங்காவில் 'பணிக்கு பாராட்டு' நிகழ்வு

(சகா தேவராஜா)

உலகெலாம் ஜீவசேவை ஆற்றிவரும் இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த சுவாமி விவேகானந்தரின் 163 ஆவது ஜெயந்தி தினத்தையொட்டி, அவர் பெயரில் ஆரம்பித்த கிரான் குளம் விவேகானந்த பூங்காவில் பணிக்கு பாராட்டு எனும் நிகழ்வு இடம்பெற்றது.

விவேகானந்த பூங்கா பணிக்கு உதவி வழங்குகின்றவர்களை அல்லது அவர்களது பெற்றோர்களை விசேட தினங்களில் கௌரவிப்போம் என்ற செயற்திட்டத்தை விவேகானந்த பூங்கா ஸ்தாபகர் பிரபல சமூக செயற்பாட்டாளர் கந்தப்பன் சற்குணேஸ்வரன் முன்னெடுத்து வருகிறார்.

சமூக நலன்புரி ஒன்றியம், விவேகானந்த தொழில்நுட்ப கல்லூரி,

முல்லைத்தீவு அன்னை சாரதா இல்லம், மட்டக்களப்பு திலகவதியார் மகளிர் இல்லம் போன்ற பல சமூகநோக்குடைய அமைப்புகளை உருவாக்கி ஜீவ சேவையாற்றி வரும் க.சற்குணேஸ்வரன் அண்மையில் கிரான் குளம் விவேகானந்த பூங்காவை பிரமாண்டமான முறையில் ஸ்தாபித்தார்.

அப் பூங்காவில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து பல பரோபகாரிகள் பல விதங்களில் உதவியுள்ளார்கள்.

அவர்களை பூங்காவிற்கு வரவழைத்து பாராட்டிக் கௌரவிக்கின்ற கைங்கர்யம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் சுவாமி விவேகானந்தரின் 163 ஆவது ஜனன தினத்தில் நாவிதன்வெளியைச் சேர்ந்த திருமதி சேத்ரபதி சிதம்பரபிள்ளை மற்றும் அவரது குடும்பத்தினர் மாலை சூடி கௌரவிக்கப்பட்டனர். லண்டனில் உள்ள சிதம்பரப்பிள்ளை

தேவகாந்தன் பூங்காவில் ஒரு கட்டடத்தை அமைக்க உதவியிருந்தார். அதற்காக அவரது தாயார் கௌரவிக்கப்பட்டார்.

இப்படியான பல பணிகளுக்கு மேலும் உதவிகள் தேவையாக உள்ளதால் நீங்களும் உதவலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.





# கடலரிப்பால் கல்முனையில் பள்ளிவாசல் மதில் பாதிப்பு

## இடிந்து விழுவது காணொலியாகப் பதிவு

(பாறுக் ஷிஹான்)

கடலரிப்பு காரணமாக கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் எல்லைச் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன.

அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட நிலைமையை தொடர்ந்து கடலரிப்பின் தாக்கம் மிக வேகமாக இப்பகுதியில் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்கமுன்வர வேண்டுமென பள்ளிவாசல் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் பின்புறமாக அமைக்கப்பட்ட தென்னந்தோட்டமும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள சில தென்னை மரங்களும் முறிந்து விழுந்துள்ளன. இது தவிர அடிக்கடி தற்போது கடல் அலை சீற்றம் காரணமாக இப்பகுதிகள் கடலரிப்பிற்குள்ளாகி பாரிய சேதங்களுக்கு உள்ளாகி வருகின்றன. காலை முதல் மாலை வரை மப்பும் மந்தாரமுமாக அடை மழை இப்பகுதியில் பெய்த வண்ணம் உள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் குறிப்பாக கல்முனை பெரியநீலாவணை சாய்ந்தமருது மருதமுனைபாண்டிருப்புஅட்டாளைச்சேனை நிந்தவூர் ஒலுவில் போன்ற பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரிப்பு காற்றின் திசை மாற்றம் நீரோட்டத்தில் ஏற்பட்டுள்ள திசை மாற்றம் கடல் நீரின் தன்மை வழமைக்கு மாறாக குளிர்ச்சியாக காணப்படுகின்ற காரணங்களால் கடல் அலைகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதாலும் கடலரிப்பு மிக கோரமாக காணப்படுகின்றது.

குறிப்பாக இவ்வாறான காலநிலை மாற்றங்களால் கடலரிப்பு அதிகமாக ஏற்படுவதினாலும் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களும் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர்.





காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# விழித்துக்கொள்ளவேண்டும்

மெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் மீண்டும் தை 20ஆம் நாள் ஓவல் அலுவலகத்திற்கு வந்துள்ளார், அதிரடி முடிவுகளுக்காகப் பெயர்போன அவரது அடுத்த கட்ட நகர்வுகளுக்காக உலகம் பதற்றத்துடனும் குழப்பத்துடனும் காத்திருக்கிறது. அமெரிக்காவின் தலைமைத்துவ மாற்றம் என்பது உலகம் மீது காட்டும் செல்வாக்கு அற்பமானதல்ல. அது கடைக்கோடி ஈழ அரசியல்வரையும் பெரும் தாக்கத்தைச் செலுத்தும்.

ஒருதடவை பதவியில் இருந்த பின்னர் அமெரிக்க மக்களாலும் ஊடகங்களாலும் விரட்டியடிக்கப்பட்ட டிரம்ப் எவ்வாறு மீண்டும் பதவிக்கு வந்தார் என்பதைப் புரிந்துகொள்ள பலர் இன்னும் போராடுகிறார்கள், அந்த மாற்றத்தை அச்சத்துடன் பார்ப்பார்கள்.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் குறித்து இலங்கை ஆட்சியாளர்களும் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருப்பர். ஏனெனில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பு உள்ளிட்ட உலக அரங்கில் அமெரிக்க ஆட்சி மாற்றம் இலங்கை தொடர்பான அணுகுமுறையையும் மாற்றும். அதேநேரம் சீனா குறித்த ட்ரம்பின் பார்வை, அணுகுமுறை கொழும்புக்கு அதிக அழுத்தத்தையும் வழங்கும். அதனால் இந்த ஆட்சி மாற்றம் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்குத் தலையிடியுடன் கூடிய பாரமே!

அதுமட்டுமல்லாமல் ட்ரம்பின் மீள் எழுச்சி, இலங்கையிலும் அரசியல் வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவதற்கான ஆர்வத்தைப் பலரிடமும் தோற்றுவிக்கலாம். தை 6, 2021 அன்று அமெரிக்க தலைநகரில் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்து டொனால்ட் டிரம்பின் வாழ்க்கை மீளக்கூடும் என்று சிலர் மட்டுமே கணித்திருப்பார்கள். இருப்பினும், அது இன்று சாத்தியமாகியுள்ளது. அதுபோன்ற ஒரு சாதகமான தருணத்திற்காக ராஜபக்சக்கள் உட்பட பல அரசியல்வாதிகளும் இலங்கையில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ட்ரம்பின் வழியைப் பின்பற்றத் துடிக்கக்கூடும்.

டிரம்ப்களின் வருகையைப் பற்றி மற்றவர்கள் எப்படி உணர்ந்தாலும், அமெரிக்கர்களே அவர் பதவிக்குத் திரும்புவதற்காகப் பெருமளவில் வாக்களித்தனர். அதன் மூலம் நான்கு வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட அதே இடத்திற்கு ட்ரம்பும் அவரது ஆதரவாளர்களும் திரும்பியுள்ளனர். உலகக் காவல்துறை அதிகாரியாகத் தன்னை எப்போதும் நிலைநிறுத்தி வந்திருந்த அமெரிக்காவில் அவற்றை இடதுகையால் ஒதுக்கிவிட்டு, டிரம்ப் என்ற அரசியல்வாதி, பாதுகாப்பு, அடையாளம், பொருளாதாரம் மற்றும் குடும்பம் போன்ற உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குத் திரும்புகிறார். அவரது இந்த அணுகுமுறை அமெரிக்கர்களிடம் வலுவாக எதிரொலித்துள்ளது என்பது தெளிவாகிறது, அதுபோன்றே விமல் வீரவன்ஸ போன்றவர்கள் இப்போது சிங்களத் தேசியவாதத்தை மீண்டும் கையிலெடுத்து ஆளும்தரப்புக்கு எதிராக மேற்கிளம்ப எத்தணிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

டிரம்ப் பொறுப்பேற்ற பிறகு விரைவாகச் செயல்படுவார், நாடு கடத்தலைத் தொடங்குவதற்கான நிர்வாக உத்தரவுகள் ஏற்கனவே அவரது மேசையில் தயாராக உள்ளன, இஸ்ரேல் – பலஸ்தீனப் போர், உக்ரைன் – –ரஷ்ய போர், ஈரான், ஏமன், வட கொரியாவுடனான அதிகரித்த பதற்றங்கள் மற்றும் நோர்டிக் பகுதி, பால்டிக், தென் சீனக் கடல், தைவான் போன்ற பகுதிகளில் நிலவும் பதற்றங்கள் ட்ரம்ப் வருகையால் மேலும் தீவிரமாகலாம்.

டிரம்பின் வருகையால் அமெரிக்காவின் இந்தோ–பசிபிக் உத்தி குறைவாகவே மாறக்கூடும் என்று சில பார்வையாளர்கள் நம்புகின்றனர். இலங்கையின் முக்கிய சந்தைகளில் ஒன்றாக அமெரிக்கா இருப்பதால், டிரம்பின் புதிய கொள்கைகள் இலங்கை ஏற்றுமதி மற்றும் தொழில்துறையை எவ்வாறு பாதிக்கப் போகின்றன என்பதும் கவனத்திற்குரியது.

டிரம்ப்பின் இரண்டாவது அதிபர் பதவிக் காலம் குறித்து எதையும் துல்லியமாக கணிப்பது மிகச் சவாலானது. ஆனால் அதனைக்கணித்து காய்நகர்த்த வேண்டிய தேவை கொழும்புக்கு மட்டுமல்ல தமிழர்களுக்குமே முக்கியமானது. அதன் முதல் அறிகுறியாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா மீண்டும் விலகினால் இலங்கை தொடர்பான தீர்மானம் அங்கு பெரும் சவாலுக்குள்ளாகும் என்பதை கனடா கோடிகாட்டியுள்ளது. தமிழ்த் தலைவர்கள் தமது உள்ளகச் சண்டைகளுக்கு அப்பால் விழித்துக்கொள்ளவேண்டும்.



# அடுத்த ‘சுற்று’

**என் சத்திய மூர்த்தி**

இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் இனப்போர் உச்சகட்டங்களில் இருந்த போதெல்லாம், தென்னிலங்கை தரப்புகளிடையே, தமிழர் அரசியலில் அடுத்தது என்ன, என்பது ஒரு பேசுபொருளாக இருந்தது. அனைவருமே, இனப்போரில் விடுதலை புலிகள் அமைப்பு அழிக்கப்படும் என்பதில் தெளிவாக, உறுதியாக இருந்தனர். அவர்களில் பலரும், போருக்கு பிந்தைய காலகட்டத்தில், தமிழர் அரசியல் எவ்வாறு பயணிக்கும் என்பது குறித்தும் தங்களது கருத்துக்களை தனிப்பட்ட உரையாடல்களில் தெரிவித்து வந்தனர்.

இந்த உரையாடல்கள் எல்லாம், ஒரு புள்ளியில் வந்து நிற்கும், சம்மந்தனின் காலத்திற்கு பின்னர், தமிழ் தலைவர்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்டு, இனப்பிரச்சினையை இல்லாததாக்குவார்கள். எஞ்சியிருக்கும் உணர்வாளர்களை, தென்னிலங்கை கட்சிகளில் யாராவது ஒருவர் தங்கள் பக்கத்திற்கு இழுத்துக்கொள்ளமுடியும் என்பதுதான் அது. அன்றைய நிலையில், ஆளும் சுதந்திர கட்சியும் எதிர் தரப்பில் ஐக்கிய தேசிய கட்சியும் மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்திருந்தன.

தமிழ் தேசியம் முக்கியத்துவம் பெறும் வரையில், அந்த இரண்டு கட்சிகளுமே தமிழர் பகுதிகளிலும் கோலோச்சி வந்தன என்பதே உண்மை. அந்த பின்னணியில்தான், 1975இல் விடுதலை புலிகள் அமைப்பின் நிறுவனர் பிரபாகரனுக்கு முதல் பலியான யாழ்பாண மேயர் ஆல்பர்ட் துரையப்பா, சுதந்திர கட்சியை சார்ந்தவர் என்று அறியப்பட்டார்.

இன்று உள்ளது போல் ஆளும் ஜேவிபியோ, அந்தக் கட்சித் தலைமைத்துவம் வழங்கும் தேசிய மக்கள் சக்தி கூட்டணியோ, அன்று வளர்ந்திருக்கவில்லை. அவ்வாறு வளரும் என்றோ, அரசின் அடக்குமுறை காரணமாக, பிற்காலத்தில் அந்தக் கட்சி ஜனநாயகப் பாதையை தேர்ந்தெடுக்கும் என்றோ, அவர்களில் யாரும் நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். அவ்வாறெல்லாம் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.



என்றாலும் அன்றைய தென்னிலங்கை அரசியல் சாணக்கியர்களின் கணக்கு ஒரு விதத்தில் நிரூபணம் ஆகி உள்ளது. தென்னிலங்கையில் இன்று பச்சை பிடித்து பெரிய மரமாக வளாந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி, தமிழர் பகுதியிலும் வேரூன்றி உள்ளது. அதாவது, தென்னிலங்கை ஆதரவு நிலை எடுத்து, அதிலும் வழக்கமாகப் பிரிந்து நிற்கும் தமிழ்



வாக்காளர்கள், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு முகமாக ஆளும் தரப்பை ஆதரித்துள்ளார்கள்.

அந்தப் பேரலையில் டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி-ம் அங்கஜன் ராமனாதன் நாடாளுமன்றத்தில் பிரதிநிதிப்படுத்திய சுதந்திர கட்சியும், மிச்சசொச்சம் இருந்த பழைய ஐக்கிய தேசிய கட்சியின் வாக்குளுமே அள்ளுண்டன. அவர்களின் வாக்காளர்கள் மொத்தத்தில் ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க-வின் மாயவலையில் சிக்குண்டனர். அதிலிருந்து அந்த வாக்காளர்கள் வெளிவந்தாலும், அவர்கள் இப்போதுகூட ’தமிழ் தேசியம்’ பேசும் கட்சி தலைமைகளின் பின்னே அணிவகுக்க மாட்டார்கள் என்றே தோன்றுகிறது.

## சொல்லி திருந்தும் ஜாதி

தற்போதைய பிரச்சினைகள் குறித்து மேலும் அலசுவதற்கு முன்னர், இவ்வாறான தென்னிலங்கை அறிவுஜீவிகளின் கூட்டல்-கழித்தல்கள் குறித்து நன்கு அறிந்த சம்மந்தன், ஏன் பிரச்சினைக்கான விடையை தேட முயற்சிக்கவில்லை? தனது காலத்திற்கு பின்னர், தலைக்கு மேல் வெள்ளம் சாண் போனால் என்ன, முழும் போனால் என்ன, என்று விட்டேத்தியாக அவர் செயல்பட்டது ஏன்?

தன்னை சுற்றியிருக்கும் அனைத்துத் தரப்புத் தமிழ் தலைவர்களும் சொல்லித் திருந்தும் ஜாதி அல்ல, பட்டு திருந்துவார்களா, என்றாவது பார்க்கலாம் என்று அவர் கருதினாரா? அல்லது, அவரும் மற்றவர்களை போல், தனக்கு பின்தான் தானமும் தர்மமும் என்று கருதிச் செயல்பட்டாரா? உண்மையை சொல்ல வேண்டுமானால், அவர் நோய்வாய்பட்டு, வைத்தியசாலைக்கும் வீட்டுக்குமாக பயணித்து வந்த மூன்றாண்டு காலத்திலும் அவர் முன்னாலேயே தமிழர் அரசியல் சின்னபின்னமாகி வந்தது. அதனை தடுத்து நிறுத்த அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதே அப்பட்டமான உண்மை.

இந்தப் பின்னணியில், எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலில், இனப்பிரச்சினையுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட கட்சிகளுக்கு வாக்களிக்காதவர்கள் மட்டுமல்ல, நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களித்த வாக்காளர்கள்கூட உள்ளாட்சித் தேர்தலில் அவர்கள் பின்னால் நிற்க மாட்டார்கள். எந்தவொரு தென்னிலங்கை சார்ந்த தேசியக் கட்சிக்கும் அவர்கள் வாக்களிக்க மாட்டோம் என்று உறுதி பூண்டால், எதிர்வரும் தேர்தலை அவர்கள் புறக்கணிப்பதற்கான வாய்ப்பே இன்னும் அதிகமாகி உள்ளது. அந்த நிலையே, பின்வரும் மாகாணசபை தேர்தலிலும்கூடத் தொடரலாம்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை தொடர்ந்து,

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்த....

4ம் பக்கத் தொடர்ச்சி..........

ஜேவிபிக்கு வாக்களித்த தமிழ் வாக்காளர்கள் தாங்கள் தவறு செய்துவிட்டனர் என்று முடிவு செய்து, தங்கள் இனம் சார்ந்த கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள் என்ற நப்பாசை அந்தத் தலைமைகளிடம் இருந்தது. இன்னமும் இருக்கிறது. தங்களுக்குள் பிரிவுகள் வந்ததாலேயே தமிழர்கள் அரசியலில் வெறுப்படைந்த மக்களே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்றும் தாங்கள் ஓரணியில் நின்றால், அது வெற்றிக்கு வழி வகுக்கும் என்றும் அவர்களில் சிலராவது நம்புகிறார்கள்.

### உள்குத்து அரசியல்

அத்தகைய கணக்குகள் ஒருபுறமிருக்க, தற்போது சுமந்திரன் குறித்து சிறீதரன் நாடாளுமன்றத்தில் வைத்துள்ள குற்றச்சாட்டு, இவர்கள் இன்னமும் பாடம் படிக்கவில்லை என்பதையே பறைசாற்றுகிறது. சிறீதரனின் குற்றச்சாட்டு, சரியா-தவறா, உண்மையா-பொய்யா, என்பது ஒருபுறம் இருக்க, இவ்வாறு தமிழ் தேசியத்தின் உள்வீட்டு அரசியலை, உள்குத்து அரசியலை தென்னிலங்கையின் முன்னர் சிறீதரன் படம் போட்டு காட்டியது, தமிழர் அரசியலுக்கு கிடைத்துள்ள மற்றுமொரு பலத்த அடி.



முன்பு கூறியது போல், சம்மந்தன் காலத்திற்கு பின்னர் தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொண்டு இனப்பிரச்சினையை இல்லாததாக்குவார்கள் என்ற தென்னிலங்கையின் எதிர்பார்ப்பு உண்மையாகி உள்ளது. அதிலும் குறிப்பாக, தென்னிலங்கைத் தலைவர்கள் சம்மந்தனின் அரசியல் வாரிசாகக் கருதிச் செயல்பட்ட சுமந்திரன் நாடாளுமன்ற தேர்தலில் அடைந்த தோல்வியோடு, உள்கட்சியிலேயே இல்லாதாக்கப்படுகிறார் என்பதை அவர்கள் கவனித்து நோக்கும்போது, அவர்களைப் பொறுத்தவரை, இனித் தமிழர்கள் மத்தியில் 'இனமாவது, பிரச்சினையாவது'.

### சாதித்தது என்ன?

சிறீதரன், நாடாளுமன்றத்தில் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவந்து அதில் சுமந்திரனின் பெயரையும் கோர்த்துவிட காரணம்தான் என்ன? பொங்கலுக்கு முன்னால், சென்னையில் தமிழ் நாடு அரசு சார்ப்பில் முன்னெடுக்கப்பட்ட 'தமிழ் அணங்கே' நிகழ்ச்சிக்கு இந்த இருவரும் உள்பட இங்கிருந்த தலைவர்கள் பலரும் முண்டியடித்துக்கொண்டு சென்றனர். செல்வம் அடைக்கலநாதனும் சாணக்கியனும்கூட இந்த 'லிஸ்டில்' அடங்குவார்கள்.

அவர்களில் சிறீதரன் மட்டும் கொழும்பு விமான நிலையத்தில், குடியுரிமை அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டார். பின்னர், அதே விமானத்தில் பயணிக்க இருந்த முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலையீட்டிற்குப் பின்னர், பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டார். இது குறித்து, சிறீதரனுக்கு பின், நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த ரவூ-ப் ஹக்கீமும் இதனைக் குறிப்பிட்டுப் பேசியுமிருந்தார்.

அண்மையில்கூட மேலை நாடுகளுக்கு பிரச்சினை எதுவுமின்றி பயணித்த சிறீதரன், தற்போது தன்னை குடியுரிமை அதிகாரிகள் வேண்டுமென்றே நிறுத்தி வைத்தது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் உரிமை மீறிய செயல் என்று வாதிட்டுள்ளார். அவரது வாதத்தை ஏற்றுக்கொண்ட அவை முன்னவரும் மூத்த அமைச்சருமான பிமல் ரத்னாயகே, சிறீதரனுக்கு எதிராக எந்த வழக்கும் இல்லை என்றும் அவரது குற்றச்சாட்டு குறித்து விசாரிக்கப்படும் என்றும் உறுதி அளித்தார்.

இவற்றில் எல்லாம் சுமந்திரன் எங்கே வந்தார்? அவையில் சிறீதரன் சுட்டிக்காட்டியது போல், இடைப்பட்ட காலத்தில், ஒரு யூ ட்யூப் சேனலுக்கு பேட்டி அளித்த சுமந்திரனிடம் சிறீதரன் விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது குறித்து கேட்கப்பட்டது. பிரச்சினையில் அவசியமில்லாமல் சுமந்திரன் மூக்கை நுழைத்துக்கொண்டார் எனலாம்.

சென்னைப் பயணத்தின்போது, சிறீதரன் கானடா நாட்டை சேர்ந்த தடைசெய்யப்பட்ட புலம்பெயர்ந்தோர் அமைப்பினரை சந்தித்து பேசுவதாக ஏதோ ஒரு 'மீடியா' செய்தி வெளியிட்டிருந்ததாக தான் கேள்விப்பட்டதாக சுமந்திரன் 'கூலாக்'க் கூறினார். அவரது கூற்றின்படி, இது குறித்த செய்தி அறிந்திருந்ததால் தானோ என்னவோ, குடியுரிமை அதிகாரிகள் சிறீதரனை தடுத்து நிறுத்தி அவரிடம் கேள்வி கேட்டனர்.

இது குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய சிறீதரன், நாடாளுமன்றின் உரிமை மீறல் குழு, தான் கானடா அமைப்பினரைச் சந்திக்க இருந்ததாக சுமந்திரன் கூறிய செய்தியை எந்த மீடியா வெளியிட்டது என்று அவரிடம் கேள்வி எழுப்பவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அவர் சொல்லாமல் சொன்னது, அவ்வாறு எந்தவொரு மீடியா செய்தியும் வெளியாகவில்லை. சுமந்திரன் சொன்னது எல்லாம், அவராக இட்டுக்கட்டிய கதை. இதன் மூலம் சிறீதரனின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் அவர் திட்டமிட்டு செயலாற்றி உள்ளார் என்பதாகும்.

பிரச்சினை உரிமை மீறல் குழுவால் முன்னெடுக்கப்படுமா, என்பது இன்னும் முடிவாகவில்லை. அதேசமயம், சுமந்திரன் போன்ற ஒரு ஜனாதிபதி சட்டதரணி, இவ்வாறான 'லூஸ் டாக்' செய்திருப்பாரா என்ற கேள்வியும் எழுகிறது. தனது யூ ட்யூப் செவ்வியில் அவர் என்னவோ மீடியாவில் அந்த செய்தி வந்ததாக தான் கேள்விப்பட்டார் என்று மட்டுமே கூறியிருந்தார். ஆனால், செவிவழி செய்திகளை மட்டுமே நம்பி, இவ்வாறான ஒரு தகவலை அல்லது குற்றசாட்டை சுமந்திரன் போன்ற தேர்ந்த, சட்டச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளாத தலைவர் முன்வைத்திருக்க வேண்டுமா, என்ற கேள்வி எழுகிறது.

### கவனச் சிதறல்கள்

உண்மை என்னவோ, இந்த விடயம், இருதலைவர்களுக்கும் இடையேயான ஈகோ போரில் அடுத்த ரவுண்ட் மட்டுமே. இந்தப் பிரச்சினை இல்லை என்றாலும், ஏதோ ஒரு காரணத்திற்காக, இருவருமே அடுத்த கட்டத்திற்குத் தயாராகி இருப்பார்கள். இதுவே, தற்போது அவர்கள் இருவரும் சார்ந்துள்ள தமிழ் அரசு கட்சியின் உள்வீட்டு அரசியலை மேலும் குழப்பமடையச் செய்திருக்கிறது.

ஜனவரி 25, கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் அரசியல் தீர்வு விடயங்களில் மட்டுமாவது அனைத்துத் தமிழ்க் கட்சியினரும் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து பேச்சு நடத்த இருக்கும் சமயத்தில், இதுபோன்ற கவனச் சிதறல்கள், தமிழ் அரசின் தொக்கி நிற்கும் கண்ணியத்திற்கு தீங்கு விளைவிக்கும். அதனை ஒட்டி, இன்னமும் இவர்கள் திருந்தவில்லை. இவர்கள் திருந்தவே மாட்டார்கள் என்ற எண்ணத்தையே தமிழ் வாக்காளர்கள் மீது மீண்டும் மீண்டும் திணிக்கும்.

இந்த நிலையே தொடருமானால், எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலிலும் தமிழ்க் கட்சிகள் இழந்துவிட்ட பழம் பெருமையை மீண்டும் நிலைநிறுத்தி விடமுடியும் என்ற எண்ணத்தை, நம்பிக்கையை மறந்து விடலாம். இது இல்லாமலே, அரசியல் தீர்வு குறித்த விடயத்தில் ஒருங்கிணைந்த செயல்திட்டத்தை முன்னெடுக்க நினைக்கும் இந்தக் கட்சி தலைமைகள், உள்ளாட்சி தேர்தலில் ஒரே அணியில் மீண்டும் போட்டியிட வேண்டும் என்ற கருத்தில் பிரிந்தே நிற்கிறார்கள்.

முன்பு, தமிழ் அரசு கட்சி, தற்போது இல்லாதாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகிய காலகட்டத்தில் முன்வைத்த கருத்தையே தற்போதும் அழுத்தம் திருத்தமாக கூறி வருகிறது. அதாவது, தமிழ் தேசிய கட்சிகள் ஒரே தரப்பில் போட்டியிட்டால், தற்போதைய விகிதாசார அடிப்படையில், அந்த அணியால் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் கைப்பற்ற முடியாது. மாறாக, அவை தனித்து போட்டியிட்டு, தேர்தலுக்கு பின்னர் ஒன்று சேர்ந்தால், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் அவர்கள் வசமாகும்.

இந்த அரசியல் நீக்கத்திற்கு அடிப்படை தேவை ஒன்று உண்டு. தனித்து போட்டியிடுவதாக வெளியே காட்டிக்கொண்டாலும், இந்தக் கட்சிகள் உள்ளாட்சி மன்றங்களில் தேர்தலுக்குப் பின்னரான தமது செயற்பாடுகள், ஆட்சி அமைப்புக் குறித்து ஒரு இணக்கத்திற்கு முன்கூட்டியே வந்தால் மட்டுமே இந்த திட்டமும் வெற்றிபெறும். இல்லை என்றால், அந்தத் திட்டமும் அம்பேல்.

### சிண்டை பிடித்து

இது இவ்வாறிருக்க, உள்ளாட்சி தேர்தல்கள் குறித்த புதிய சட்ட முன்வடிவை அரச தரப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. அதன் ஷரத்துக்கள், தற்போதைய தேர்தல் திட்டத்திற்கு முரணானது என்று தமிழ் அரசியல் தலைமைகள் கூறத் தொடங்கி உள்ளன. சட்ட முன்வடிவு அரசமைப்பிற்கு முரணானது என்று முஸ்லீம் காங்கிரஸ் இப்போதே உச்ச நீதிமன்றத்தை அணுகி உள்ளது.

எது எப்படியோ, உச்ச நீதிமன்றம் அனுமதிக்கும் அல்லது அறிவுறுத்தும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதில் அரசுக்கு எந்தவித பிரச்சினையும் இருக்காது. என்றாலும், புதிய சட்டத்தின் உள்ளடக்கங்களை சரியாக உள்வாங்கி தங்களது தேர்தல் உத்திகளை வகுத்துக்கொள்ள தமிழ் கட்சிகள் சிண்டை முடிந்து கொள்ளப்போகின்றன.

இத்தனை சிக்கல்கள் உள்ள ஒரு தேர்தலை சேர்ந்து சந்திக்க வேண்டும் என்று அனைத்து தமிழ் கட்சிகளுமே கருதி செயல்படும் வேளையில், சிறீதரன், சுமந்திரன் ஆகியோர், உள்வீட்டிலேயே தொடர்ந்தும் குறுக்குசால் ஓட்டுவதால், யாருக்கு லாபம்? இருவருமே தங்களது முகங்களை அவ்வப்போதாவது கண்ணாடியில் பார்த்துக்கொண்டால், அடுத்தவன் முகத்தில் இருக்கும் வடுவைவிட தன் முகத்தில் இருக்கும் காயம் அவர்கள் கண்ணில் படும். அவ்வாறு, அவர்கள் கண்களில் தத்தமது காயங்கள் பட வேண்டும்.

# மூன்றரை லட்சம் பேருக்கு 2025இல் வெளிநாட்டு வேலை

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் 340,000 இலங்கையர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று நடைபெற்ற புதிதாக அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் 311,000 பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது, மேலும் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கையை 12% அதிகரிக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திட்டங்களை வகுத்துள்ளது.

அதன்படி, விதிமுறைகளை முறையாக அமுல்படுத்தி, மக்களை வெளிநாடுகளுக்கு வேலைகளுக்காக அனுப்ப வேண்டும் என்றும் அதன் தலைவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அனுமதிகளைப் பெற்ற சில முகவர் நிறுவனங்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், அத்தகைய நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# அமைச்சர்களுக்கு இனிமேல் அதிசொகுசு இல்லங்கள் 'கட்'

அமைச்சர்களுக்கு அதிசொகுசு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்படுவதை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவ்வாறான 30 இல்லங்கள் தொடர்பில் தற்போது மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ இல்லங்களாக அமைச்சுக்களின் கீழுள்ள 20 இல்லங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 15 பங்களாக்கள் தொடர்பிலும் மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

குறித்த நடவடிக்கைகளின் பின்னர் அதிசொகுசு இல்லங்களை எதற்கு பயன்படுத்துவதென தீர்மானிக்கப்படும் என்று அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டார்.

சுற்றுலா தொழிற்துறையை மேம்படுத்தல் உள்ளிட்ட பயனுள்ள செயற்பாடுகளுக்காக குறித்த இல்லங்களை பயன்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் கூறினார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குக

## கலாநிதி ஹிஸ்புல்லாஹ் சபையில் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் சம்பந்தமாக நாம் தற்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இத்திட்டமானது முக்கியமானதொரு வேலைத் திட்டமாகும். உலகில் பல நாடுகளில் இவ்வேலைத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது. குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் இவ்வாறான வேலைத்திட்டத்தின் ஊடாக பொருளாதார ரீதியிலும் அபிவிருத்தியிலும் பெரிய மாற்றங்களை அடைந்துள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறான நல்ல எண்ணத்துடன் இங்கு கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டால் அவ்வேலைத்திட்டம் சிறப்பாக வளர்ச்சியடைந்து நாட்டுக்கு நன்மை சேர்க்க நாம் பிரார்த்திக்கின்றோம். இத்திட்டம் தொடர்பில் பிரதமர் சபையில் தெளிவுபடுந்தியிருந்தாலும் இன்னும் இத்திட்டமானதுமக்களுக்கும்அதிகாரிகளுக்கும் தெளிவாக சென்றடையவில்லை. அதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறும், இவ்வேலைத்திட்டத்தைதாம்வரவேற்பதோடு, முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக சிங்கப்பூர், ஏனைய நாடுகள் இத்திட்டத்தின் ஊடாக எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்று பார்க்கும் போது இத்திட்டமானது உள்ளூராட்சி மன்றங்களில்லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்தாக அறியக்கிடைக்கிறது. எனவே நாம் உள்ளூராட்சி மன்றங்களை இத்திட்டத்தில் அதிகம் பயன்படுத்தவேண்டும் அதற்கான ஆளணி, இயந்திர வசதிகள் எம்மிடம் இருக்கிறது. அவர்களுக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்தி அவர்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு



பணிகளை மேற்கொள்ளல், வடிகான் துப்புரவு, மரங்களை நடுதல், கிராமங்களை அழகு படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளலாம்.

அதேபோல், தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக அம்பாறை சேனாநாயக்கசமுத்திரம் திறந்திருப்பதால் அதிகமானவயல்நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் வெட்டுவதற்கு ஆயத்தமாக நிலையில் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பொலன்னறுவை மாவட்ட விவசாயிகள் வெள்ள அனர்த்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு விஷேட கொடுப்பனவு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவரது உரையில் தெரிவித்தார்.



# மருதானை பொலிஸ் நிலையத்தில் பெண் தற்கொலை: உண்மை நிலை உடனடியாகக் கண்டறியப்படவேண்டும்

## ஐங்கரநேசன் கோரிக்கை

மருதானை பொலிஸ் நிலையத்தில் தற்கொலைசெய்துகொண்டதாக சொல்லப்படும் தமிழ்ப்பெண்ணின்மரணம்தொடர்பானஉண்மைகள் உடனடியாக வெளிக் கொண்டுவரப்படவேண்டும் என்று தமிழ்த் தேசிப்ப பசுமை இயக்கத்தின் தலைவர் பொ .ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார் .

மருதாணை காவல் நிலையத்தில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் பெண்ணின் தற்கொலை தொடர்பாக பொ .ஐங்கரநேசன் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தச் செய்திக்குறிப்பில் -

கிளிநொச்சியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது புதன்கிழமை இறந்துள்ளார். மருதானை பொலிஸார் இம்மரணத்தைத் தற்கொலை என்று தெரிவித்துள்ளதோடு , கஞ்சா வைத்திருந்ததாலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளனர்.

செய்தியறிந்து சடலத்தை பார்வையிட்ட தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இம்மரணம் தொடர்பாகச் சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

காலங் காலமாக ஸ்ரீலங்காவில் பொலிஸார் பொய்க் க்குற்றச்சாட்டுகளைச் சோடித்து வந்துள்ளநிலையில் , இந்த பொலிஸ் நிலைய மரணம் தொடர்பான உண்மை நிலையை



வெளிக்கொண்டு வருவதற்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# திறமைக்கான தேடல் காரைதீவில் விழா

(நூருல் ஹுதா உமர்)

லக்ஸ்டோ மீடியா ஊடக, கலை, கலாசார, சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் 28 ஆவது வருட கொண்டாட்டம் எதிர்வரும் 2025 ஜனவரி 25ஆம் திகதி காரைதீவு விபுலானந்தர் ஞாபகார்த்த கலாசார மண்டபத்தில் இரண்டு அமர்வுகளாக லக்ஸ்டோ மீடியாவின் பிரதானி அறிவிப்பாளர் ஏ.எல். அன்சார் தலைமையில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வுகளின் முதல் அமர்வு பிறை எப்.எம் வானொலியின் பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூமின் தலைமையில் காலை 10 மணி தொடக்கம் மதியம் 01.00 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினர்களாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், ஓய்வு பெற்ற பிறை எப்.எம் வர்த்தக முகாமையாளர் கவிஞர் எஸ்.றபீக் மற்றும் கலாபூஷணம் எம். அருணம்பலம் ஆகியோரும் கலந்து கொள்ளும் ஆரம்ப நிகழ்வில் பல்சுவை கவியரங்கும் இடம்பெறும்.

விசுவாமித்திரன் தமிழ் மருதா மாமணியின் தலைமையில் இடம்பெறும் கவியரங்கில் கவிஞர்களான எஸ். றபீக், செங்கதிரேசன், டாக்டர் சனூஸ் காரியப்பர், மருதூர் அன்சார், மாஜிதா தவ்பீக், நஸ்லா, ஜென்னத்துல் பாத்திமா, மேரியன் அந்தோணி, ராஜரட்ணம், ஜெயா மற்றும் வசந்த காலம் ஆகியோர் கவி பாடவுள்ளனர்.

02.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் அமர்வில் மரநடுகை, பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை புத்தகப்பை வழங்குதல் என்பனவற்றுடன் திறமைக்கான தேடல் மகுடத்தின் கீழ் பல்துறை சார்ந்தவர்களுக்கு திறமைக்கு மரியாதை கௌரவ விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை கலந்து கொள்ள உள்ளதுடன் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் கௌரவ அதிதியாகவும், விசேட விருந்தினர்களாக தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், பார்ட்னர்ஸ் போ சேன்ஜ் இன்டெர்னஷனல் நிறுவன சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் றிசாத் ஷெரீப் மற்றும் கலை இலக்கியவாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொள்ள உள்ளனர்.

# ஓட்டமாவடி ஆவண திரைப்படம் அக்கரைப்பற்றில் திரையிடல்

(ஸாகிர்)

'ஓட்டமாவடி: சொல்லப்படாத கதைகள்' என்ற ஆவணப்படம் கல்முனை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பின்வரும் திரையரங்குகளில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் தொடர்ந்து திரையிடப்படுகின்றது.

கல்முனை ஜீகே. திரை அரங்கில் இன்று மாலை 2.30 மணிக்கும்

அக்கரைப்பற்று அர்ச்சனா திரை அரங்கில் மாலை 5.00 மணிக்கும் இரு காட்சிகளாக இடம்பெறவுள்ளன.

கொரோனா தொற்றில் உயிரிழக்கும் அனைவரது உடல்களையும் கட்டாய தகனம் செய்யும் கொள்கையை இலங்கை அரசாங்கம் கடைபிடித்ததுடன், இஸ்லாமிய நம்பிக்கைகளின் படி இறந்தவர்களை அடக்கம் செய்யும் கொள்கைக்கு அது எதிராகவும் அமைந்திருந்தது. இவ் ஆவணப்படம் இது தொடர்பிலான நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படம் அனைவரும் விழிப்புணர்வு பெறவேண்டிய வகையில் எடுக்கப்பட்டுள்ளதால், இதனைக்கட்டாயம் அனைவரும் பார்ப்பதன் மூலம் படிப்பினை பெற வேண்டிய பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

இந்த ஆவணப்படம் பொதுமக்கள் இலகு கருதி, தமிழ் உப தலைப்புக்களுடன் வெளியிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆவணப்படத்தின் இயக்குனரான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மறைந்த மாமனிதர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் புதல்வர் அமான் அஷ்ரஃப் இக் கதையின் உருவாக்கம் பற்றித் தெரிவிக்கையில், 'இந்தக் கதை மூலம், எனது மக்களைப் பற்றி என்னால் சொல்ல முடிந்துள்ளது. இது முஸ்லிம்களைப் பற்றிய ஒரு கதை அல்ல, எவ்வித விஞ்ஞானபூர்வ ஆதாரங்களுமின்றி, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட இலங்கையர்களைப் பற்றிய கதை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தங்களது அரசமைப்பு உரிமைகள் மீறப்பட்டதால் மௌனமாக அவதிப்பட்ட இலங்கை குடிமக்கள் பற்றிய கதையாகும். தமது சக நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட அநீதியை உணர்ந்த, பலதரப்பட்ட இன, மதப் பின்னணிகளில் உள்ள இலங்கையர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய ஒரு திரைப்படம். இது எதிர்காலத்திற்காக பதிவு செய்யப்பட வேண்டிய ஒரு கதை என அவர்கள் நம்புகின்றனர். இதன் மூலம், எந்தவொரு இலங்கையர்களும் இதுபோன்ற கொடூரமான மற்றும் தாங்க முடியாத வகையில் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படக் கூடாது எனும் நிலைப்பாட்டை அவர்கள் உறுதி செய்துள்ளனர். - என்றும் தெரிவித்தார்.

'ஓட்டமாவடி', சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள், அரசாங்க பிரதிநிதிகள், மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்டோரின் ஆழமான நேர்காணல்கள் மூலம், குறித்த சர்ச்சைக்குரிய காலகட்டத்தை ஆழமாக ஆராய்ந்துள்ள ஆவணப்படமாகவும் இவ் ஆவணப்படம் அமைந்துள்ளது.

# பெண்களின் உற்பத்தி பொருள்கள் விற்பனைநிலையம் 'கைவண்ணம்'

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் ஏற்பாட்டில் 'கைவண்ணம்' என்ற பெயரில் பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய உணவுகள் மற்றும் கைவினைப் பொருள்களின் விற்பனை நிலையம் புத்தளத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு திறக்கப்பட உள்ளது.

எம்.டப்யூ.டி.டீ நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜுவைரியா முஹைதீன் தலைமையில் இடம்பெறும் இத் திறப்பு விழாவில் புத்தளத்தின் அரச அதிகாரிகள் கலந்து சிறப்பிக்க உள்ளதுடன். பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் மேற்கொண்ட டெப் வேலைத்திட்டத்தின் ஊடாக சுயதொழில் பயிற்சியின் மூலம் பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விற்பனை நிலையமாக இது காணப்படும்.

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்ந்த 4 சந்தேகநபர்கள் கைது

(கிஷாந்தன்)

ஹற்றன் ஓயாவில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகாவலி ஆற்றிற்கு நீர்வழங்கும் ஹற்றன் ஓயாவில் பெரிய குழிகளை தோண்டி, அனுமதி இல்லாமல் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட நான்கு சந்தேக நபர்கள், ஹற்றன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் புதன்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டனர்.

ஹற்றன் ஓயாவில் இயந்திரங்களைப் பயன்படுத்தி ஒரு குழு மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக ஹற்றன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கு சோதனை நடத்தப்பட்டு, சந்தேக நபர்களை கைது செய்ததோடு, மாணிக்ககல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பலாங்கொடை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் 30-50 வயதுக்குட்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## நாடாளுமன்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர் கமகேதர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிப்பு செயற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் எம்.பியொருவரின் காலை உணவிற்கு 100 ரூபாவும், மதிய உணவுக்காக 300 ரூபாவும் மற்றும் மாலை தேநீருக்காக 50 ரூபாவும் அறவிடப்பட்டது.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உணவு செலவு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய அதன் விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் உணவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற சபைக் குழுவின் உறுப்பினர் கமகெதர திசாநாயக்க உறுதிப்படுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உணவகத்தில் விருந்தினரை உபசரித்தால் அறவிடப்படும் மேலதிக கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பிலோ மற்றும் நாடாளுமன்ற ஊழியர்களின் உணவு விலையை அதிகரிப்பது தொடர்பிலோ எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

## குடிவரவு….

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர் குடிவரவு திணைக்களத்தின் வெலிசர தடுப்பு முகாமில் கடமையாற்றும் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு குடியகல்வு அதிகாரி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் 20ஆம் திகதி மாலை குடிவரவு திணைக்களத்தின் வெலிசறை தடுப்பு முகாமில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

## புகைப்….

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதர்கள் உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் பல நாட்கள் வாழ முடியும். ஆனால், சுவாசிக்காமல் வாழ முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவாச நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சமன்மலி தல்பதடு இது தொடர்பில் தெரிவித்ததாவது:

உலகளவில் இறப்புக்கான ஏழாவது முக்கிய காரணியாக நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் உள்ளது. இந்த நோய் நிலைமை தொடர்பில் சமூகத்தில் சரியான விழிப்புணர்வு இல்லை.

இந்த நோய் பல தசாப்தங்களாக கவனிக்கப்படாமல் சிகிச்சை அளிக்கப்படாத ஆஸ்துமா அல்லது புகைபிடித்தல் காரணமாக ஏற்படுகிறது. மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் பொதுவாக 45 வயதுக்குப் பின்னர் ஏற்படும்.

நாட்டில் 40 வயதுக்கு மேற்பட்ட 10 சதவீதம் பேர் நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக 2017ஆம் ஆண்டு ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கு குறைந்தளவிலான விழிப்புணர்வே காரணமாகும்.

காற்று மாசுபாடு மற்றும் முகக்கவசங்களை அணிவதை தவிர்த்தல் ஆகியனவும் நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் ஏற்பட காரணிகளாக அமைகின்றன. நடப்பதில் சிரமம், மூச்சுத் திணறல் மற்றும் சளி போன்ற சிறிய நோய்களுக்கு அதிக உணர்திறன் ஆகியவை அறிகுறிகளாகும்.

ஆஸ்துமாவைப் போலல்லாமல், சிஓபிடி என்பது ஒரு நாட்பட்ட நோயாகும். நீண்ட காலம் இன்ஹேலர்களை பயன்படுத்துதல் முதன்மை சிகிச்சையாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

# கடவுச்சீட்டைப் பெறுவதற்கு நான்கு மாத கால காத்திருப்பு

### எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு பல மாதங்களாக காத்திருக்கவேண்டிய பிரச்சினைக்குத் தீர்வுகண முடியாத நிலையில், தற்போது நிகழ்நிலை கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளவும் மக்கள் 3 அல்லது 4 மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இந்த பிரச்சினைக்குத் தீர்வுகண அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளையின் கீழ் கேள்வி எழுப்பும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது வெளிநாட்டு கடவுச் சீட்டைப் பெறுவது என்பது பல மாதங்களாகத் தீர்க்க முடியாத தேசியப் பிரச்சினையாக இருக்கும் இவ்வேளையில், புதிய அரசாங்கம் கடந்த நவம்பர் 4 ஆம் திகதி முதல் நிகழ்நிலை முறையில் கடவுச்சீட்டைப் பெறுவதற்கான திகதிகளை ஒதுக்குவதற்கு நிர்ணயித்திருந் தாலும், தற்போதும் கூட கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ள மக்கள் 3 அல்லது 4 மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைத் தேடி வரும் ஏராளமானோர் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவுகளுக்கும் கீழாகவும் விண்ணப்பதாரர் ஒருவர் கடவுச்சீட்டைச் பெற எடுக்கும் நேரம், தினசரி வழங்கப்படும் மற்றும் விண்ணப்பிக்கும் கடவுச்சீட்டுக்களின் சராசரி எண்ணிக்கை, அதேநேரம் இந்த கடவுச்சீட்டுகளை வழங்கும் திட்டத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தடங்களை ஏற்படுத்தியுள்ள காரணங்கள், இயல்பு நிலைக்கு திரும்ப எதிர்பார்க்கப்படும் காலம் என்னவென அரசு பதிலளிக்க வேண்டும்.

மேலும், ஜனவரி 2024 முதல் இன்று வரை கடவுச்சீட்டுக்களைப் பெற பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, இதுவரை வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை, வழங்க வேண்டியுள்ள எண்ணிக்கை, தற்போது கையிருப்பில் இருக்கும் எண்ணிக்கை, தற்போது கடவுச்சீட்டுகளை வழங்கும் சேவை வழங்குநர் யார்? விலைமனு கோரல் தொடர்பான தகவல்களை சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவது முக்கியம் என்ற படியால், இவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் அதனால் இது தொடர்பில் எடுத்த நடவடிக்கைகள் குறித்து உடனடியாக பதில் வழங்க வேண்டும் என்றார்.

# மீன் ஏற்றுமதி விரிவாக்கம் குறித்து பாகிஸ்தானுடன் அமைச்சர் பேச்சு

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தானுக்கு மீன் ஏற்றுமதியை விரிவுபடுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஃபஹீம் உல் அஜீஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதிலும், குறிப்பாக மீன்பிடித் துறையில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதிலும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. மேலும் இதன் போது பாகிஸ்தான் பிரதமரின் அன்பளிப்பாக ஒரு சிறப்புப் பரிசு உயர்ஸ்தானிகரால் அமைச்சருக்கு வழங்கப்பட்டது.

இது நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வெளிப்படுத்தும் அடையாளமாக அமைந்தது. மீன்பிடித்துறையில் கூட்டாண்மை முயற்சிகளுக்கான சாத்தியக்கூறுகளை அவர் வலியுறுத்தினார். மேலும், இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற பாகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முழுமையான பயனை இலங்கை பெற்றுக்கொள்ளாதது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. திலாப்பியா மீன்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் போதுமான அளவு பயன்படுத்தப்படவில்லை என்பதை உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

திலாப்பியா மீன்களுக்கான கேள்வி பாகிஸ்தானில் அதிகரித்து வருவதாகவும், அந்தத் தேவையை பூர்த்தி செய்யும் திறன் இலங்கைக்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மையளிக்கும் வர்த்தக உறவுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உயிரித் தொழில்நுட்பத் துறையில் பாகிஸ்தானின் மேம்பட்ட நிபுணத்துவம் மற்றும் மீன்பிடித் துறையில் புதுமை மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக அந்த அறிவைப் பகிர்ந்துகொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்பாளர் மஹ்வாஷ் சாமி மற்றும் இரண்டாம் செயலாளர் இப்திகார் ஹூசைன் அமைச்சின் பிரத்தியேக செயலாளர் கலாநிதி பி.கே. கோலித கமல் ஜினதாச ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# இலங்கை வங்கியின் வருமானம் இந்த ஆண்டு ரூ. 100 பில்லியன்

இலங்கை வங்கியின் மூலம் 2025 மற்றும் 2026 ஆம் வருடங்களில் எதிர்பார்க்கும் இலாபம் 100 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் பிரதியமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி வேளையில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

இலங்கை வங்கியின் மூலம் 2025 மற்றும் 2026 ஆம் வருடங்களில் எதிர்பார்க்கும் இலாபம் 100 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கை வங்கியின் கடந்த வருடத்திற்கான இலாபம் 100 பில்லியன் ரூபாவாகும். அந்த இலாபம் தற்போது கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

சிட்டி வங்கிகளில் அதிக அனுபவமுள்ள அதிகாரியான சொய்ஸா இலங்கை வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனிப்பட்ட ரீதியில் எந்த விருப்பு வெறுப்புக்கும் இடம் கொடுக்காத திறமை மிகுந்த அதிகாரி என்பதை கவனத்திற் கொண்டே அந்த பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை வங்கி கட்டமைப்பில் எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தின் பிரயோகம் முன்னெடுக்கப்படும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



களுவாஞ்சிக்குடியில்

# பிரதேச செயலகப் பணியாளர்களுக்கு ‘கிளீன் ஸ்ரீ லங்கா’ திட்டக் கலந்தாய்வு

(சகா தேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

‘அழகான நாடு ... புன்னகைக்கும் மக்கள்’ எனும் கருத்திட்டத்தின் கீழ் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேசசெயலகமாநாட்டுமண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் முக்கிய அம்சங்களான சூழல்சார் நிலைபேறானதன்மை, சமூகதிறன் மேம்பாடு, ஆட்சி நிலைபேறானதன்மை மற்றும் பொருளாதார நிலைபேறானதன்மை ஆகியனவற்றை மேம்படுத்தல் தொடர்பாகவும், அவற்றை அடைவதற்கான இலக்குகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

அத்துடன் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் அடிப்படையானவிடயங்கள்தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பொது மக்களின் நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் வினைத்திறனாக பணியாற்றவேண்டும் எனவும்பிரதேசசெயலாளரால்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மூன்றாவது முறையாகவும் வெள்ளத்தினால் பாதிப்பு

## கிளிநொச்சி விவசாயிகள் வேதனையில்

இறைவனோடு குளத்தின் வான் கதவுகள் மூன்றாவது முறையாகவும் இரணைமடுகுளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஜயன் கோயிலடி ஊரியான் பெரியகுளம் கண்டாவளை ஆகிய பகுதிகளில் அறுபடை நடைபெற்று வந்த எஞ்சி இருந்த நெற்கதிர்கள் முற்றும் முழுதாக வயல் நிலங்களும் முற்று முழுதாக அழிவினை ஏற்படுத்தி உள்ளதுடன் வெள்ள பாதிப்பு காரணமாக குளங்களில் நீர்மட்டம் அதிகரிப்பு காரணமாக முதலைகளும் மக்கள் குடியிருப்புபகுதிகளுக்குள் புகுந்து பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக வீட்டிலோ அல்லது வெளியில் செல்வோர் தனிமையில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர். மேலும் கூறுகையில் -

வட்டக்கச்சி பெரியகுளம் பகுதியில் இருந்து புளியம்பொக்கனை செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் குறுக்கரத்து பாய்வதன் காரணமாக கனரக வாகனங்கள் மாத்திரமே இவ்வீதி ஊடாக பயணிக்க கூடியதாக உள்ளதாகவும் இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளனர். 113

# சட்டத்தரணி காண்டீபனிடம் ரிஐடி நேற்று விசாரணை

சட்டத்தரணி நடராஜர் காண்டீபனை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் (ரிஐடி) நேற்று விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

பொலிஸ் தலைமையகத்தின் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் ஜனவரி 21 விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தேன். அன்றைய தினம் விசாரணைக்கு சமூகம் அளிக்க முடியாதற்கான காரணத்தை தெரிவித்து குறித்த விசாரணையை ஜனவரி 23க்கு மாற்றித் தருமாறு என்னால் செய்யப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இன்றைய தினம் காலை 9.00 மணிக்கு குறித்த விசாரணைக்கு சமூகம் அளித்திருந்தேன்.

உப பொலிஸ் பரிசோதகர் டில்ரங்காகுறித்த விசாரணையை முன்னெடுத்த நிலையில் எனது வாக்குமூலத்தை தமிழில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் நிஷாந்தினி பதிவு செய்தார்.

2023.09.17ஆம் திகதி தியாகதீபம் திலீபன் அவர்களின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி பவனி திருகோணமலை சர்தாபுரத்தில் காடையர்களால் தாக்குதலுக்குள்ளான நிலையில் 16 மாதங்கள் கடந்து குறித்த விசாரணை இடம்பெறுவது தொடர்பில் எனது ஆட்சேபனையை தெரிவித்திருந்தேன்.

நான்கு மணித்தியாலங்கள் வரையில் இடம்பெற்ற விசாரணையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் கேள்விகளுக்கு எனது பதிலை வழங்கியிருந்ததுடன் தியாக தீபம் திலீபனின் அரசியலை முன்னெடுக்கவேண்டியது எம் ஒவ்வொருவரினதும் பணியாகும் எனும் அடிப்படையில் மிகத் தெளிவாக எனது தரப்பு நியாயத்தை முன் வைத்திருந்தேன்.

எனது அரசியல் வேணவாவை விடுதலைப் போராட்டமும் திலீபனும் காவி நின்றதாலேயே நான் அதனை ஆதரித்திருந்தேன். இன்னும் ஆதரிக்கிறேன். இனியும் ஆதரிப்பேன். என்பதை நான் பதிவு செய்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ரோஹிங்கிய அகதிகளை திருப்பி அனுப்பும் எந்த முடிவும் இதுவரையில் எடுக்கவில்லை

## பிரதியமைச்சர் சபையில் உறுதியளிப்பு

மியன்மார் ரோஹிங்கியா அகதிகள் இலங்கையில் குடிவரவு சட்டத்துக்கு முரணாகவே நாட்டுக்குள் வருகைத் தந்துள்ளார்கள். இவர்களின் விடயத்தில் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் செயற்படுகிறது. இருப்பினும் நாட்டின் சட்டத்துக்கு அமைய செயற்பட வேண்டிய அவசியமும் காணப்படுகிறது. இவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிரானது என்ற முத்திரையைகுத்தஒருதரப்பினர்முயற்சிப்பது கவலைக்குரியது என வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்றத்தில் நேற்று ரோஹிங்கியா முஸ்லிம்கள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

166 ரோஹிங்கியா முஸ்லிம் அகதிகள் கடந்த டிசெம்பர் 19 சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு வந்தார்கள். கடற்படையினர் இவர்களை மீட்டு அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கியுள்ளனர். தற்போது இந்த எண்ணிக்கை 167 ஆக அதிகரித்துள்ளது. நாட்டின் குடிவரவு சட்டத்துக்கு முரணாகவே இவர்கள்வந்துள்ளனர்எனவேஇவ்விடயத்தில் தேசிய கொள்கை ஒன்றை அமுல் படுத்த வேண்டும்.

அத்துடன் மறுபுறம் மனித உரிமைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். 1959 ஆம் ஆண்டு சமவாயத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை. அந்த சமவாயத்தில் அகதிகளை அங்கீகரிக்கவும் அவர்கள் தொடர்பில் நெருக்கமாக செயற்படுவதற்கும் குறிப்பிடப்பட்டுள்ளது. சமவாயத்தில் கைச்சாத்திடாவிடினும் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட்டுள்ளோம். செயற்படுகிறோம்.

மியன்மார் ரோஹிங்கியா அகதிகள் சட்டவிரோதமாக படகுகளில் நாட்டுக்குள் வந்துள்ளனர். இவர்கள் இலங்கையின் குடிவரவு சட்டத்தை மீறியுள்ளார்கள். ஆகவே நாட்டின் சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். தனிமைப்படுத்தல் சட்டம்,குடிவரவு, குடியகல்வு சட்டம் மற்றும்



தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்களை கருத்தில் கொண்டே இவர்கள் தற்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அரசாங்கத்தில் இருந்த அமைச்சரே இன்று இவர்கள் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்துள்ளார். மியன்மார் நாட்டு ரோஹியன்கா மக்கள் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளார்கள். அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதை ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே வலியுறுத்தியுள்ளோம்.

அரசியலில் தோல்வியடைந்துள்ளவர்கள் இந்த ஆளும்தரப்பு முஸ்லிம்களுக்கு விரோதமானது என்ற முத்திரையை குத்த முயற்சிக்கின்றனர். சட்ட விரோதமான முறையில் நாட்டுக்கு வந்தவர்களை இன ரீதியில் பார்க்கவில்லை மனிதாபிமான ரீதியில் பார்த்தே அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

நாங்கள் நேரடியாகவே அவர்களை பார்ப்பதற்கு சென்றோம். அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். எமது நாட்டு மக்களும் கடந்த காலங்களில் அகதிகளாக பல நாடுகளுக்கு சென்றுள்ளார்கள். ஆகவே அந்த வேதனையை நாங்கள் நன்கு அறிவோம்.

ஆகவே இவ்விடயத்தில் இனவாத ரீதியிலான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது கவலைக்குரியது. இவர்கள் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு வந்துள்ளனர். ஆகவே இவ்விடயத்திற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு எந்தவித தீர்மானங்களும் இதுவரை எடுக்கப்படவில்லை. நாட்டில் தங்கவைப்பது, நாட்டை விட்டு வெளியேற்றுவது அல்லது வேறு ஒரு நாட்டுக்கு அனுப்பிவைப்பது என்ற யோசனைகள் மட்டுமே முனவைக்கப்பட்டுள்ளன என்றார்.

# கடந்த கால ஆட்சியாளர்களின் நிலைமைக்கு மாற வேண்டாம்

## அரசுக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் வேண்டுகோள்



'க்ளீன் சிறிலங்கா' செயற்திட்டம் தொடர்பில், ஜனாதிபதியினதும் ஆளும் கட்சி அமைச்சர்கள், உறுப்பினர்களின் கருத்துக்களை, கடந்த இரு தினங்களாக இந்த நாடாளுமன்றத்தில் கேட்டுவருகின்றோம். ஒரு சில உறுப்பினர்களின் பேச்சானது, தனிப்பட்டவர்களைவஞ்சம்தீர்க்கும் வகையிலும் பழிதீர்க்கும் எண்ணத்துடனும் பொருத்தமில்லாத பேச்சுக்களாக இருப்பதைக் காணமுடிந்தது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

க்ளீன் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில், புதன்கிழமை நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

'உண்மையில், 'கிளீன் சிறிலங்கா' சுத்தமாக்கப்படல் வேண்டும் என்பதை நாம் வரவேற்கும் அதேவேளை, அது அனைத்துத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் இருக்கின்ற 225 பேரும், நாங்கள் எங்களது நிலைப்பாட்டை, எண்ணங்களை முதலில் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். அப்படி செய்கின்ற போதுதான், நாடும் நாட்டினுடைய எதிர்காலமும் சிறப்பானதாக அமையும்.

எனவே, அந்த வகையில், இந்த வேலைத்திட்டம் தொடர்பில், மக்கள் இன்னும் புரிந்துணர்வுடன் இல்லை. எனவே, அரசாங்கத்திற்கு ஒரு தார்மீக பொறுப்பு இருக்கின்றது. இதனை சரியாக மக்களுக்கும் குறிப்பாக, இங்கு இருக்கின்ற எமக்கும் இது பற்றிய தெளிவான விளக்கம் வழங்கப்படவில்லை. இங்கு பேசிய பேச்சுக்களில் 'க்ளீன் சிறிலங்கா' திட்டத்தை தெளிவுபடுத்துவதை விட, ஒருவரை ஒருவர் திட்டுகின்ற, பழிதீர்க்கின்ற மற்றும் கடந்த காலங்களில் நடைபெற்ற விடயங்களை பேசுகின்ற வகையிலேயே, நேரங்கள் வீணடிக்கப்பட்டதையே பார்க்க முடிந்தது.

கடந்த காலங்களில், இருந்த நாடாளுமன்றமும், அரசாங்கமும் சரியில்லை என்பதால்தான், உங்களைப் போன்றவர்களை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை, ஜனாதிபதியாக தெரிவு செய்ய அதிகப்படியான ஆதரவை மக்கள் வழங்கினார்கள். நீங்களும் கடந்த காலங்களில், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் செயற்பட்டதை போலல்லாது, மன திருப்தியோடு மக்கள் கொடுத்துள்ள ஆணையை, மதித்து செயற்படுவதற்கான நிலையை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். இல்லாதவிடத்து, இந்த நாடு மீண்டும் குட்டிச்சுவராக, பொருளாதாரத்தில் பின்னடைவைக் கண்டு வீழ்ச்சியடைவதை தடுக்க முடியாமல் போய்விடும்.

உங்களிடத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்ற பலம் இருக்கின்றது. கடந்த காலத்தில், ஆட்சியாளர்கள் தேவையான நேரத்தில் தங்களுக்குத் தேவையான சட்டங்களை இயற்றிக்கொண்டார்கள். இவ்வாறு நீங்கள் இல்லாது, நாட்டு மக்கள் வழங்கியுள்ள சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி, மக்களுக்கான சட்டங்களை ஏற்படுத்துவது தொடர்பில் கூடிய கவனத்தைச் செலுத்துங்கள்.

குறிப்பாக, எம்மைப் பொறுத்தவரையில், இந்திய நாடானது மிகவும் முக்கியத்துவமிக்கதாகும். அண்மைய, ஜனாதிபதி அவர்களின் விஜயத்தை அடுத்தான கூட்டறிக்கையில், நாங்கள் ரோட் கெணக்டிவிட்டியினை காணவில்லை. கடந்த கால அரசாங்கங்கள், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பாலம் அமைப்பது தொடர்பிலான பேச்சுகளை நடத்தி, சில உடன்பாடுகளையும் எட்டியிருந்தனர். ஆனால், அது கைவிடப்பட்டுவிட்டதா? அல்லது இந்த அரசாங்கத்திற்கு அதில் உடன்பாடு இல்லையா? என்ற விடயம் தொடர்பில், நாம் அறிந்துகொள்ள ஆவலாக உள்ளோம்.

இந்த நாடு பஞ்சத்தில் விழுந்தபோது, இந்தியா 4 பில்லியன்கள் டொலர் வழங்கி பெரும் உதவியைச் செய்தது. அவ்வாறு இந்த உதவி கிடைக்காமல் போயிருந்தால், எமது நாடு இன்னும் அதலபாதாளத்துக்கு போயிருக்கும். இவ்வாறான நிலையில், இந்த இணைக்கும் பாலம், இந்தியாவில் உள்ள ஒரு பில்லியன் மக்களை இணைக்கும் ஒன்றாக மாறுகின்றது மட்டுல்லாமல், யாரெல்லாம் இந்தியாவுக்குச் சுற்றுலாக் கருதி வருகின்றார்களோ, அவர்கள் மூலமாக எமது நாட்டின் பொருளாதாரமும் சுற்றுலாத் துறையும் மேம்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

உதாரணமாக, பஹ்ரைன் நாட்டில் சென்று பார்த்தால், சவுதி அரேபியாவை இணைக்கும் பாலம் இருக்கின்றது. ஒன்று போதாது என்பதால் இரண்டாக அதனை அதிகரித்திருக்கின்றது அரசு. இவ்வாறு பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான பாலம் என்பனவற்றை குறிப்பிடலாம்.

எனவே, இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது, யுத்தத்தால் குறிப்பாக, பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் வாழுகின்ற மக்கள் குறிப்பாக, நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மன்னார் மக்கள் நன்மையடைவதுடன், சுற்றுலாத்துறையால் இந்தப் பிரதேசங்கள், பொருளாதார ரீதியில் நன்மையடையக் கூடிய சூழல் உண்டு. எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல், சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்த போது, ஆரம்பித்த வீட்டுத்திட்டங்கள் நிறைவு செய்யப்படாமல் அறைகுறையாகக் காணப்படுகின்றன. இந்த க்ளீன் சிறிலங்காவின் மூலம், அந்த வீடுகளை அமைப்பதுதான் முக்கியம். நாங்கள் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டங்களுக்குச் செல்கின்றபோது, மக்கள் அங்கு வந்து, இந்த வீடமைப்பை நிறைவுசெய்து தருமாறு கேட்கின்றனர். எனவே, கோட்டாபய செய்தது போன்று இதனை நிறுத்தாமல், அதற்கான மதிப்பீட்டினை செய்து, அந்தப் பணத்தை அம்மக்களுக்கு பெற்றுக்கொடுங்கள்.

அதேபோன்று, 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள், அவர்களது சொந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர சென்றபோது, அந்தப் பிரதேசம் மக்கள் வாழ முடியாத பகுதியாகக் காணப்பட்டது. என்னுடன் யாழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு வந்து பார்வையிட்டனர். எனவே, நாங்கள் சொந்த நிதியைக்கொண்டு ஒரு காணியை பெற்றுக்கொடுத்தோம். அந்தக் காணியின் அபிவிருத்திக்காக, கடந்த அரசாங்கம் 8 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்தது. ஆனால், தற்போதைய புதிய ஜனாதிபதியின் சுற்றுநிருபத்திற்கமைய, அந்த பணத்தை நிறுத்தியுள்ளார்கள். தயவுசெய்து, அந்த பணத்தை வழங்கி, அந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்கு உதவி செய்யுமாறு வேண்டுகின்றேன்.

இதே போன்று, புத்தளம் தள வைத்தியசாலையை எடுத்துக்கொண்டால், அங்கு போதுமான தூய்மையின்மை காணப்படுகின்றது. அதனை மத்திய அரசின் கீழ் கொண்டுவர வேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக, இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்திற்கு வந்தது முதல், அந்த வைத்தியசாலை பல்வேறு தேவைகளைக்கொண்டதாக மாறியுள்ளது. இந்த வைத்தியசாலையை, வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் அபிவிருத்தி செய்ய முயற்சிகளை செய்தவேளை, அந்த அரசாங்கம் மாறிவிட்டது. 35 வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவந்து, அபிவிருத்திகளை செய்யவுள்ளதாக அறிகின்றோம். எனவே, புத்தளம் வைத்தியசாலையையும் இந்த திட்டத்துக்குள் உள்வாங்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

அதேபோல், வவுனியாவில் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக கொட்டப்படுகின்ற குப்பைகளினால் 5000 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் அதேபோன்று, அயலில் உள்ள கிராமங்கள், குடியிருப்புக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இந்த 'க்ளீன் சிறிலங்கா' திட்டத்தில், இதற்கான பாதுகாப்பு அரண்களை அமைத்து, மாணவர்களும் மக்களும் பாதிக்காத வகையில், வவுனியாவில் முதல் திட்டமாக இதனைச் செய்யுங்கள்.

அதேபோல், புத்தளம், முந்தல், கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஒரு பிரதி திட்டப் பணிப்பாளர் நிசான்த என்பவர், கடந்த அரசாங்கத்தில் நாங்கள் பெற்றுக்கொடுத்த பணத்தில் ஒரு சதத்தையேனும் செலவழிக்காமல் இருந்துள்ளார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பணத்தை செலவு செய்துள்ளார். இது தொடர்பில், இவரிடம் கேட்டபோது, குறித்த பணம், முஸ்லிம்களும், தமிழ் மக்களும் வாழ்கின்ற கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, இந்தப் பணிகளை நிறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

இந்தப் பணத்தை மக்களுக்கு செலவு செய்திருந்தால், மக்கள் நன்மை அடைந்திருப்பார்கள். மிகவும் துவேசத்துடன் இப்படி செயற்படுவது தொடர்பில், அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறுகின்ற அதிகாரிகள் இவ்வாறு செயற்படுகின்றபோது, நாடாளுமன்ற உறுப்பினர்களை க்ளீன் செய்வதில் காட்டுகின்ற கரிசனையை, இப்படிப்பட்ட அதிகாரிகள் மீதும் காட்டி, இவர்களை க்ளீன் செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அத்துடன், செவ்வாய்க்கிழமை கல்முனையிலும் மன்னாரிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அங்கு காணப்படும் மதுபானசாலைகளுக்கு எதிராகவே இவை இடம்பெற்றுள்ளன. எனவே, இது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். - என்று குறிப்பிட்டார்.

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# கேள்வி: பக்தி என்றால் என்ன?

ஆன்மீகத்தில் பொதுவாக கூறப்படும் வழிகள் மொத்தம் நான்கு.

அவை,

1. ஞான மார்க்கம்.
2. கர்ம மார்க்கம்.
3. கிரியா மார்க்கம்.
4. பக்தி மார்க்கம்.

நாம் அனைவரும் மனிதர்கள் என்ற போதிலும் நம்மில் சிலருக்கு கேள்வி அறிவு புத்திசாலித்தனம் அதிகமாக இருக்கும் அப்படிப்பட்டவர்களுக்கு ஞானமார்க்கம் உகந்தது.

சிலருக்கு உடல் உழைப்பு மேலோங்கியிருக்கும் அத்தகைய நபர்களுக்கு கர்ம மார்க்கம் எளிதாக இருக்கும். இன்னும் சிலருக்கு உடலில் சக்தி அளவு அதிகமாக இருக்கும் அத்தகையவருக்கு கிரியா யோக மார்க்கம் சரியாக இருக்கும். கடைசியாக உணர்ச்சி அதிகம் உள்ளவர்களுக்கும் பக்தி மார்க்கம் எளிதாக இருக்கும்.

### பக்தி என்றால் என்ன?

பக்தி என்றால் இதுதான் என்று அறுதியிட்டு கூறிவிட முடியாது. பக்தியில் உள்ள மிகப்பெரிய சௌகரியம் எது என்றால் உங்கள் மனதுக்கு உகந்தவாறு பக்தி செலுத்தலாம்.

63 நாயன்மார்கள் ஆகட்டும் அல்லது பன்னிரண்டு ஆழ்வார்கள் ஆகட்டும் ஒவ்வொருவருடைய பக்தியும் ஒன்றுபோல் இருப்பது இல்லை வித்தியாசமாக இருக்கும். ஒருவர் செய்தது போல் மற்றொருவர் செய்ததில்லை.

### கண்ணப்ப நாயன்மார்.

கண்ணப்ப நாயனார் போல் வரலாற்றில் இது வரை முன்னர் யாரும் தங்களுடைய கண்களை கடவுளுடைய பக்திக்காக அவர் செய்தது போல செய்ததில்லை. அவர் காலத்துக்குப் பின்னால் இது நாள் வரை அவரை போல யாரும் செயல் செய்ததில்லை.




### பூசலார் நாயன்மார்.

மனதாலே தான் விரும்பிய இறைவனுக்காக கோவில் கட்டி சிவபெருமானுடைய அன்புக்கு பாத்திரமானவர்.

பூசலார் அவர்களைப் போல இதுவரையில் வரலாற்றில் மனதிலேயே கோவில்கட்டி பக்தி செய்தவர் எவருமில்லை அதேபோல பூசலார் அவர்கள் காலத்திற்குப் பின்பும் இந்த நாள் வரை மனதால் கோவில் கட்டி இறைவனுக்கு பாத்திரமானவர் நான் அறிந்த எவரும் இல்லை.

63 நாயன்மார்கள் ஆகட்டும் அல்லது 12 ஆழ்வார்கள் ஆகட்டும் ஒவ்வொருவருடைய பக்தியும் மிகவும் வித்தியாசமானது மேலும் மேலே கூறியவர்களின் பக்தியை அவர்கள் வணங்கிய இறைவனே அங்கீகரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




### ஆண்டாள்.

காதலும் ஒருவகை பக்தி என்று கொள்ளப்படுகிறது அவ்வகையில் ஆண்டாள் சிறுவயதில் இருந்து இறைவனையே காதலித்து மணம் புரிய விரும்பினார்கள்.

ஆண்டாளுடைய காதல் பக்தியை அந்தக் கடவுளும் ஏற்றுக்கொண்டு ஸ்ரீரங்கத்து பெருமாளுடன் ஆண்டாள் இரண்டறக் கலந்ததாக வரலாற்றுச் செய்தி உள்ளது.

### பக்த மீராபாய்.

தமிழ்நாட்டில் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் நாச்சியாரை போலவே மீராபாய் அவர்களும் கடவுளின் மீது காதலாகி கசிந்துருகி அவர் வாழ்க்கையின் கடைசியில் துவாரகையில் உள்ள கிருஷ்ணருடன் இரண்டறக் கலந்தார் என்பது வரலாற்று செய்தி.

நீங்கள் கேட்கலாம் மீராவும் ஆண்டாளும் காதல் என்ற வகையில் ஒரே போல தானே பக்தி செலுத்தினார்கள் என்று.

ஆனால் உற்று நோக்கினால் ஆண்டாள் நாச்சியார் திருமணம் ஆகாமலேயே இறைவன் மீது காதல் பக்தி செலுத்தியவர்கள் ஆனால் மீராவோ ஏற்கனவே திருமணமாகி பின்னர் இறைவன் மீது காதல் பக்தி செலுத்தியவர்கள் என்ற வேறுபாடு புரியும்.

நம் நாட்டில் இப்படி பல பெண்கள் இறைவனை காதலனாக வரித்துக்கொண்டு காதல் பக்தி செலுத்தியுள்ளார்கள் அவர்களுடைய கதைகளில் சிறுசிறு வேறுபாடுகள் இருக்கும்.

### நடனகோபால நாயகி சுவாமிகள்.



இதுவரை நாம் சில உதாரணங்களைப் பார்த்தோம் அதில் பெண்ணாக பிறந்து உள்ள நபர்கள் இறைவனை நாயகனாக பாவித்து காதல் பக்தி செய்தனர்.

ஆனால் நடன கோபால நாயகி சுவாமிகள் பிறப்பால் ஆண் மகன். தன்னை நாயகியாக பாவனை செய்து கடவுளை நாயகனாக பாவித்து காதல் பக்தி செய்தவர்.

சைவ சமயத்தில் நால்வர் என்று போற்றப்படும் சமய குரவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் இறைவன்பால் பக்தி செலுத்தி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### திருஞானசம்பந்த மூர்த்தி.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அவர்களின் பக்தி பாவம் என்பது தன்னை பிள்ளையாகவும் இறைவனை தந்தையாகவும் பாவித்து பக்தி செலுத்திய வகை.

### திருநாவுக்கரசர்.

திருநாவுக்கரசர் நாயனார் அவர்களின் பக்தி பாவம் என்பது தன்னை ஆண்டவனின் அடிமையாகவும் இறைவனை முதலாளியாகவும் பாவித்து பக்தி செலுத்திய வகை.

### சுந்தரமூர்த்தி நாயனார்.

சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களின் பக்தி பாவம் என்பது தன்னை ஆண்டவனின் நண்பனாக பாவித்து பக்தி செலுத்திய வகை.

சிவபெருமான் சுந்தரரை தன் நண்பராக ஏற்றுக் கொண்டு நண்பனின் காதலுக்கு தூது சென்றார் என்பது வரலாற்றுச் செய்தி.

### மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகர் அவர்கள் இறைவனிடத்தில் குரு சிஷ்ய பாவனையில் இறைவனை குருவாக பாவித்துக் கொண்டு தன்னை சீடராக பாவித்து பக்தி செலுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்தியில் பிரதானமானது திடசித்தம். உதாரணமாக மீராபாய் அவர்கள் வாழ்ந்த காலம் என்பது கிருஷ்ணர் காலத்தில் இல்லை இருந்த போதும் மன உறுதியுடன் கிருஷ்ணரை காதலித்து கிருஷ்ணருடன் இரண்டறக் கலந்தார். பல பெற்றோர்கள் அவர்களுடைய 'தான்' என்ற தன்மையை மிகவும் குறைத்துக் கொண்டு அவரது பிள்ளைகளுக்காக அவர்களுடைய தன்மையை விட்டுக் கொடுக்கிறார்கள். பக்தி செலுத்திய பக்தர்கள் பெரும்பாலும் 'தான்' என்ற தன்மையை முழுமையாக குறைத்து விட்டு, அந்த இடத்தில் அவர்கள் பாவித்த பாவமுடன் அல்லது ஒரு வகையில் இறைவனை முழுமையாக நிரப்புகிறார்கள்.

**இராமசுப்ரமணியம் செல்லப்பெருமாள்**
**இந்தியா**

# இந்தியரின் பயணப்பொதியை திருடிய சந்தேகநபர் கைது

(கிஷாந்தன்)

ரயிலில் பயணித்த இந்திய பிரஜை ஒருவரின் பயணப் பொதியை திருடியதாக சந்தேக நபர் ஒருவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட மெனிகே ரயிலில் பயணித்த இந்திய பிரஜை ஒருவரின் பயணப் பொதியை திருடிய சந்தேக நபர் ஒருவர் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளால் புதன்கிழமைகைதுசெய்யப்பட்டு ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

உடரட மெனிகே ரயிலின் மூன்றாவதுபெட்டியில்பயணித்த இந்திய பிரஜையின் பயணப் பொதியை, இங்குருஓயா மற்றும் கலபட ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் குறித்த சந்தேக நபர் களவாடியுள்ளார்.

பின்னர் காணாமல் போன பயணப் பொதி குறித்து ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறைபாடு செய்ததையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேக நபரை காணாமல் போன பயணப் பொதியுடன்கைதுசெய்து,அவரை ஹற்றன் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஹற்றன் பொலிஸ் அதிகாரிகள், சந்தேக நபர் மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும், அவர் கண்டியிலிருந்து ஹற்றனுக்கு ரயிலில் பயணிக்க ரயில் டிக்கெட் பெற்றிருந்துள்ளர் எனவும் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக மலையக ரயில் பாதையில் இயக்கப்படும் பயணிகள்ரயில்களில்இதுபோன்ற திருட்டுகள் அடிக்கடி நடப்பது குறித்து ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என ஹற்றன் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சம்மாந்துறையில் இரண்டு பேர் கைது

(ஹமீட்)

மருதமுனை பகுதியில் ஆடு மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவற்றை திருடி சம்மாந்துறை பகுதியில் விற்பனை செய்ய வந்த சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு ஆடு, மோட்டார் சைக்கிள் மற்றும் ஐஸ் போதைப் பொருளையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகள் கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்டபகுதியில்மூன்று ஆடுகள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஐஸ் போதைப்பொருள்போன்றவை விற்பனை செய்ய வருகைதந்த சந்தேக நபர்களை புதன்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவுஅதிகாரிகளால் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை பகுதியில் கடந்த 2025.01.21 ஆம் திகதி மூன்று ஆடுகள் மற்றும் வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளன என சம்மாந்துறை பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரால் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட போது, சம்மாந்துறை தாருஸ்ஸலாம் பாடசாலைக்கு பின்பகுதியில் நேற்று நண்பகல் வேளை 21 வயதுடைய சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் சம்மாந்துறை ஹிஜ்ரா பள்ளிவாசலுக்கு அருகில் நேற்று மாலை வேளையில் 34 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில், சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும், பெரியநீலாவணை02-மருதமுனை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையசந்தேகநபர்ஒருவரும் என மொத்தமாக இருவரை சம்மாந்துறைபெருங்குற்றப்பிரிவு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்களிடம் இருந்து திருடிய மூன்று ஆடுகள், திருடிய இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்தவரிடம் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட 2140 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும், பெரியநீலாவணை 02 - மருதமுனை பகுதியைச் சேர்ந்தவரிடம் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட 2650 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த கைது நடவடிக்கை சம்மாந்துறை பொலிஸ்நிலையபதில்பொறுப்ப திகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில், பொலிஸ் நிலைய பெருங் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், பொலிஸ் உத்தியோகத்தர்களான எம். நிரஞ்சன், ஜிஹான், உள்ளிட்ட குழுவினர் இக்கைது நடவடிக்கையில்ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மியன்மார் அகதிகளைத் திருப்பி அனுப்பும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள்

## ஜனாதிபதியிடம் நளீர் வேண்டுகோள்

(ஹாரீஸ்)

இலங்கையில் புகலிடம் கோரி வரும் மியன்மார் ரோஹிங்கியா அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவு குறித்து கவலையடைவதாகவும், குறித்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் எம்.ஏ.நளீர் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் கோரியுள்ளார்.

மேலும்குறித்தகடிதத்தின்தெரிவிப்பதாவது-

சர்வதேசமனிதாபிமானக்சட்டங்களையும், கொள்கைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும், துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் தங்கள் தாயகத்தில் இருந்து தப்பி வந்த இவர்களின் நலனை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதும் எமது உறுதியான நம்பிக்கையாகும்.

மியான்மாரில் கடுமையான வன்முறை மற்றும்அடக்குமுறைகாரணமாகரோஹிங்கியா மக்கள் நம் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் இலங்கைக்கு வந்திருப்பது பொருளாதார நோக்கில் புலம்பெயர்ந்தவர்களல்ல, உண்மையாக உயிருக்கு பயந்துதான். ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகம் இந்த நபர்களின் அவலநிலையை அங்கீகரித்துள்ளது, மேலும்மனிதஉரிமைகள்மற்றும்கண்ணியத்தை மதிக்கும் ஒரு தேசமாகிய நாங்கள் அவர்கள் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவது நமது கடமையாகும்.

அகதிகள் மீதான சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுடன் எமது நாட்டின் நடவடிக்கைகள் ஒத்துப்போவதை உறுதி செய்ய வேண்டும், இது மறுபரிசீலனை செய்யாத கொள்கையை வலியுறுத்துகிறது. தனிநபர்கள் அவர்களின் உயிருக்கு அல்லது சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்களைஎதிர்கொள்ளும்இடங்களுக்கு அவர்களைத்திருப்பிஅனுப்புவதைத்தடுக்கிறது. இந்தக் கோட்பாட்டை நிலைநிறுத்துவதன் மூலம், பாதிக்கப்படக்கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு இலங்கை அர்ப்பணிப்பை வெளிப்படுத்துதல் வேண்டும்.

வரலாற்று ரீதியாக, இலங்கை துன்புறுத்தலுக்கு ஆளாகியவர்களுக்கு புகலிடமாக இருந்து வருகிறது. அத்துடன் பல இலங்கையர்கள் மோதல் காலங்களில் வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துள்ளனர். மியன்மார் ரோஹிங்கியா அகதிகளின் தற்போதைய நிலைமை கடந்த காலத்தில் ஒரு தேசமாகநாம்எதிர்கொண்ட போராட்டங்களை பிரதிபலிக்கிறது என்பதை நினைவில் கொள்வது மிகவும்முக்கியமானது. மியன்மாரில்அவர்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் இன்னும் ஆபத்தில் உள்ளன. இச்சந்தர்ப்பத்தில் இந்த மக்களை வலுக்கட்டாயமாக மியான்மாருக்கு திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அகதிகள் இலங்கையில் இருக்கும் போது அவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கைதிகளாகக் கருதப்படாமல், நமது இரக்கமும் ஆதரவும் தேவைப்படும் மக்களாகக் கருதப்பட வேண்டும். மேலும், இந்த அகதிகள் தங்களுக்குப் பாதுகாப்பானதாகக் கருதப்பட்டவுடன் அவர்களின் ஒப்புதலுடன் மீள்குடியேறக்கூடிய பொருத்தமான மூன்றாவது நாட்டை அடையாளம்காணஐக்கியநாடுகள்சபையுடன் ஒத்துழைப்பது பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

இவ்விடயத்தில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பிற்கு நான் என்றும் நன்றி உள்ளவனாக இருப்பேன். என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற முந்தைய கொள்கையிலிருந்து பின்வாங்க முடியாது

## ஆளும் தரப்பிற்கு கஜேந்திரகுமார் அழுத்தம்

பயங்கரவாதத்தடைச்சட்டம்நீக்கப்படவேண்டும் என்ற உங்களின் முந்தைய கொள்கையிலிருந்து நீங்கள் ஒரு போதும் பின்வாங்க முடியாது. தேவைக்கேற்றவாறு நீங்கள் கொள்கையை மாற்றியமைக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கிளீன் சிறிலங்கா விவாதத்தில் கலந்த கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் இந்த கிளீன் சிறிலங்கா திட்டத்தைப் பற்றி நாம் விவாதிக்கும் போது நான் இணையத்தில் சென்று அறிந்து கொள்ள முயற்சித்தேன். அது சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை போன்ற மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரிவுகளைப் படிக்கும் போது, அந்தப் பிரிவுகள் அரசியல்பிரச்சினைகளை முதன்மையாகவும் சுற்றுச் சூழலையும், தூய்மையையுடனும் தொடர்புபட்டிருந்தன. அவை மிகவும் பரந்த கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தது என்று நான் நினைக்கிறேன்.

ஒருமைப்பாட்டை உறுதி செய்வதன் மூலம் நம்பிக்கையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று இணையத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசாங்கம் மிகவும் விரிவான வேலைத்திட்டத்தை இணையத்தளத்தில் முன்வைத்துள்ளதாகக் கருதுகிறேன். இவை, கடந்த நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் அரசாங்கத்திற்குக் கிடைத்த ஆணையைப் பிரதிபலிப்பனவாகத் தோன்றியது. கிளீன் திட்டத்தை பொறுத்தமட்டில் கடந்த 75 வருடங்களாக இந்த நாட்டை ஆட்டிப்படைத்த ஊழல் கலாசார, அரசியல் கலாசாரம் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு முக்கிய விடயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். பொதுப் பாதுகாப்பு அமைச்சரும் எனது நல்ல நண்பருமான கௌரவ நீதி அமைச்சர் அவர்கள் இங்கு வந்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த சில நாள்களுக்கு முன் அவரது கருத்துக்கள் தொடர்பாக தெரிவிக்க வேண்டும். ஜே.வி.பியுடன் இணைந்த தேசிய மக்கள் சக்தியின், தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பான அவர்களின் கடந்தகால நிலைப்பாடுகள் காரணமாக, எனக்கு அவர்களுடன் அதிக உடன்பாடு இல்லை.

இனப்பிரச்சினை தொடர்பான தமது நிலைப்பாட்டை ஜே.வி.பி இன்னும் தெளிவாக்கவில்லை. மேலும் அரசாங்கத்தில் உள்ள சில உறுப்பினர்கள் பல விடயங்களில் மிகவும் முற்போக்கான கருத்துக்களைக் கொண்டுள்ளனர் என்பதையும் நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். கடந்த 75 ஆண்டுகள் நெறிமுறையாக இருக்கவில்லை என்றும், அதனால்தான் மக்கள் முழுமையான மறுசீரமைப்பை விரும்பினார்கள் என்றும் நீங்கள் தெரிவிப்பதன் மூலம், நீங்கள் பயன்படுத்திய நெறிமுறை என்ற சொல்லின் அர்த்தத்தை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்றே நினைக்கிறேன்.

நீங்கள் அந்த நெறிமுறை என்ற சொல்லைப் பயன்படுத்தும் போது, அதன் முக்கியமான பகுதி என்னவென்றால், இன்று நீங்கள் சொல்வதற்கும், நாளை நீங்கள் சொல்வதற்கும், உங்கள் சொந்த செயல்களின் பொருள் மற்றும் அர்த்தங்களுக்கும் இடையில் நீங்கள் இணக்கமாக இருக்க வேண்டும் என்பதேயாகும். இது மிகவும் முக்கியமானது என்று நான் நினைக்கிறேன்.

எனவே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்று இந்த பயங்கரவாதத் தடுப்புச்சட்டமாகும். நான் மட்டுமல்ல ஜே.வி.பியே உடன்படாத ஒரு சட்டமுமாகும். இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஜே.வி.பியே கண்டித்திருக்கிறது. ஏனென்றால் அவர்களும் இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டார்கள். தேர்தலின் போதும் அதற்கு முன்பும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று கூறப்பட்டது. 2015 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று உறுதியளித்திருந்தது. ஆனால் தேர்தல்கள் முடிந்த பின், அப்போதைய அரசாங்கம் முதல் வாரத்திலேயே அந்த உறுதிப்பாட்டில் இருந்து மிக விரைவாக பின்வாங்கிவிட்டது. நினைவேந்தலின் போது கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். சில கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னரே பொலிஸார் நீதிமன்றங்களுக்குச் சென்று தம்மால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பி அறிக்கைகளில் இருந்த பயங்கரவாத குற்றச்சாட்டுகளை வாபஸ் பெற்றிருந்தனர்.

நீங்கள் இந்தச் சட்டத்தை கொடூரமானது என்று சொல்கிறீர்கள். பொலிஸாரோ அதை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அதை எப்போதும் தவறாகப் பயன்படுத்துவார்கள். இது இந்த பயங்கரமான சட்டத்தின் வரலாறாகும். உங்கள் அரசாங்கம் வேறுவிதமாக இருக்கவிரும்பினால், நீங்கள் நெறிமுறையாக இருக்க விரும்புகிறீர்கள் என்றால் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற உங்களின் முந்தைய கொள்கையிலிருந்து நீங்கள் ஒரு போதும் பின்வாங்க முடியாது. தேவைக்கேற்றவாறு நீங்கள் கொள்கையை மாற்றியமைக்க முடியாது. கிளிநொச்சி கோணாவில் பாடசாலைக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் சென்று ஆசிரியர்களை விசாரணை செய்ய முயன்றுள்ளனர். இல்ல விளையாட்டு போட்டியின் போது அலங்காரம் செய்தமைக்கு கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் விசாரிக்கப்படுகிறார்கள்.

வடக்கு, கிழக்கில் நடைபெறும் நினைவேந்தல் தொடர்பாக பொது பாதுகாப்பு அமைச்சர் மோசமாக கருத்து தெரிவித்துள்ளார். நினைவேந்தல் என்பது பயங்கரவாதம் அல்லது பயங்கரவாதத்திற்கு சமமானது போன்று தெற்கில் உள்ள சிலர் கூறியதால் அவர் அவர்களை திருப்திப்படுத்த முயல்கிறார்.



வடக்கு கிழக்கிற்கு வேறு வடிவத்தை நீங்கள் கொண்டிருக்க முடியாது. அது நீங்கள் கூறும் நெறிமுறைக்கு புறம்பானதாக அமையும். சிலர் கூச்சலிடுவதால், உங்கள் நிலைப்பாட்டை மாற்ற முடியாது. நீங்கள் புதிய கலாசாரத்தை உருவாக்கப் போகின்றீர்கள் என்றால் நீங்கள் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் செயற்படவேண்டும். நீங்கள் அதே முந்தைய அரசாங்கங்களின் பாதையில் தான் செல்வீர்களாயின் அதே போன்றே பாதிக்கப்படுவீர்கள்.

பிரதமர் அவர்கள் இப்போது கல்வி அமைச்சராகவும் இருக்கின்றார். அவர் எதிர்கட்சியில் அமர்ந்திருந்த போது, எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த அவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தொடர்பாக பிரச்சினை ஒன்றை எழுப்பியிருந்தார். இலங்கை அதிபர் சேவைக்கான தகுதியை பெற்றிருந்த ஒருவர் அப்பாடசாலைக்கு அதிபராக முறையாக நியமமிக்கப்பட்டிருந்தபோதும் டக்ளஸின் அரசியல் தலையீடு காரணமாக அவரது நியமனம் இடைநிறுத்தப்பட்டதாகவும் மற்றும் தற்போது அதிபராக உள்ளவர் அப்பாடசாலையின் அதிபராக செயற்படமுடியாதவர் என்றும் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

அவர் இப்போது கல்வி அமைச்சராக இருக்கிறார். ஆட்சிக்கு வந்து 100 நாள்கள் ஆகிவிட்டன. இந்த நாட்டில் இந்த அரசாங்கத்தில் உள்ள மிகவும் சக்தி வாய்ந்த நபர்களில் ஒருவராகவும் இருக்கிறார். எனவே, இதுபோன்ற முறையற்ற செயற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டும்.

இறுதியாக, நீதியமைச்சர், அரசியல் கைதிகள் இல்லை எனத் தெரிவித்திருந்தார். அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று யாழ்ப்பாண உரைகளில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எனவே அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

100

# லக்ஷபான தேயிலை மலையில் சிறுத்தையினது சடலம் மீட்பு

(கிஷாந்தன்)

நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஷபான தோட்டம் வாழமலை பிரிவில் உள்ள தேயிலை மலையில் புதன்கிழமை சுமார் நான்கு அடி நீளமான உயிரிழந்த நிலையில் சிறுத்தை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தோட்ட மக்கள் வழங்கிய தகவலையடுத்தே குறித்த சிறுத்தை சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சிறுத்தை விஷ உணவு உட்கொண்டு உயிரிழந்துள்ளதா அல்லது எவரேனும் கொன்றுவிட்டனரா? என்பது தொடர்பாக நல்லதண்ணி பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன் உடலில் காயங்களும் காணப்படுகின்றன.

குறித்த சிறுத்தையின் சடலத்தை நல்லதண்ணி வனஜீவராசிகள் எடுத்து சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# கற்பிட்டியில் பதிவு செய்யப்படாத - தகுதியான ஆசிரியர்களற்ற பாலர் பாடசாலைகள் யாவும் இவ்வருட இறுதியில் மூடப்படும்

## உதவி பிரதேச செயலாளர் சந்தியா பிரியதர்ஷினி தெரிவிப்பு

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாலர் பாடசாலைகள் 89 காணப்படுகின்றன. எனினும் இதில் 47 பாலர் பாடசாலைகள் மாத்திரமே கல்வி தகைமைகளை பூர்த்தி செய்த ஆசிரியர்களுடன் இயங்குகின்றன எனவும் அத்தோடு பதிவும் மேற்க்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தனக்கு அறிக்கிடைத்துள்ளது என கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்ட கற்பிட்டி பிரதேச உதவி செயலாளர் சந்தியா பிரியதர்ஷினி உரையாற்றும் போது தெரிவித்தார்.

இந் நிகழ்வு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் கற்பிட்டி உதவி பிரதேச செயலாளர் சந்தியா பிரியதர்ஷினி தலைமையில் புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி பிரதேச செயலக பாலர் பாடசாலை பொறுப்பதிகாரி எச்.ஏ நிப்ராஸ், கற்பிட்டி பிரதேச சபையின் பாலர் பாடசாலை பொறுப்பதிகாரி ரூபீகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எனவே கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கற்கை நெறி தகைமைகள் தொடர்பாகவும் பதிவு செய்யப்படாதுள்ள பாலர் பாடசாலைகள் தொடர்பாகவும் எதிர்வரும் காலங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவதோடு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இவ்வாறு கல்வித் தகைமை மற்றும் பதிவுகள் மேற்கொள்ளாத கற்பிட்டி பிரதேசத்தில் காணப்படும் சகல பாலர் பாடசாலைகளையும் மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். இந்த விடயங்களை எமது பிரதேச பாலர் பாடசாலை ஆசிரியர்கள் கவனத்தில் கொண்டு சேவையாற்றுவதுடன் வினை திறன் மிக்க பாலர் பாடசாலைகளை கற்பிட்டி பிரதேசத்தில் உருவாக்குவதற்கு சகலரும் ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும்.

அத்தோடு கற்பிட்டி முகத்துவார தீவுப் பகுதியில் நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த தமிழ் மொழி பாலர் பாடசாலையை கிராம உத்தியோகத்தரின் முழுமையான முயற்சியுடன் வேல்ட் விஷன் நிறுவனத்தின் உதவியுடன் எதிர்வரும் பெப்ரவரி 05 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், சகல பாலர் பாடசாலை ஆசிரியர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்.







காலைக்கதிர் Kalaikkathir

# இளம் விவசாயத் தொழில் முயற்சியாளர்களுக்கு சம்மாந்துறையில் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

கிராமமட்டத்தில்இளைஞர்களுக்குவிவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் கமத்தொழில், காணி, கால்நடைவளங்கள், நீர்ப்பாசன, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கல் அமைச்சின் 0.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மல்வத்தை-03(மஜீட்புரம்) கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட இளம் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு விவசாய உபகரணங்களை வழங்கி வைத்தார்.





மேலும் இந் நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்(திட்டமிடல்) எஸ்.எம் முஸ்தபா, களஞ்சிய பொறுப்பாளர் ஏஎம்.அன்வர் அலி, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டிஎம் மனாஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.நுஸ்ரத் பேகம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.யூஎம் யாஸீத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

கிளிநொச்சிவர்த்தகசங்கத்தினர் நேற்றுதமதுவர்த்தகநிலையங்களை மூடியபடி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன் போது தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள் ஆகிய நாங்கள்வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தரும் பல வியாபாரிகள் அவர்கள் எந்தவித அனுமதியும் பொறாமல் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அத்துடன் மெகா சேல்ஸ் என கூறி கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி நகர வர்த்தகர்களின் வியாபாரத்திலும் அவர்களது வாழ்வாதாரத்திலும் பாதிப்பைஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதாகவும் எனவே இவர்களை உடனடியாக இப்பகுதியில் இருந்து மாற்ற வேண்டும் என வர்த்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் அவர்களுக்கு மகஜர் ஒன்றைவும் கையளித்தனர்.

இதன் போது மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிக்கையில்-

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்று தருவதாக கூறினார். 113

# குச்சவெளி கைநாட்டான் குளக்கட்டை பாதுகாக்கும் வேலைகள் தொடக்கம்

(ஹஸ்பர்)

சீற்றகாலநிலைகாரணமாகதற்போது பெய்து வருகின்ற தொடர் மழையால் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட கைநாட்டான் குளத்தின் அனைக்கட்டு உடைக்கும் நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் மற்றும் விவாசாய சம்மேளணங்கள் இணைந்து பிரதேச சபையின் செயலாளர் அவர்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர் வெ.இந்திரஜித் அவர்களின் கட்டளைக்கமைய பிரதேச சபையின் ஊழியர்கள், இராணுவ படையினர், விவசாய சம்மேளன உறுப்பினர்கள்,



பொதுமக்கள் இணைந்து குறித்த கைநாட்டான் குளக்கட்டிற்கு மண் அணைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2025இல் வெளியிடப்பெற்றது